விலை ரூபா 2:00 ★ 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 ஆவணி 23 ஜுலைகஜ் 22 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (8—9—85) இதழ் 210

## பல நூறு ஏக்கர்களில் வவனியா விமானப்படை தளம் மேலும் விஸ்தரிப்பு!

(வவனியா)

வவனியா விமானப்படை தளத்திற்கு மேலும் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்படவுள்ளது

தற்போது வவனியா தச்சன்குளம் பகுதியில் உள்ள விமானப்படை தளம் மேலும் விஸ் விஸ்தரிக்கப்பட்டு பல பந்தோபஸ்து ஏற்பாடுகள்

(1 -ம் பக்கம் பார்க்க)

# தமிழன் - சிங்களவன் என்ற 'இனவாதம்' தொடருமானல் எமது மக்களுக்கே அழிவு!

## உமாமகேஸ்வரன் கருத்து

(யாழ்ப்பாணம்)

"தமிழன் - சிங்களவன் என்ற இனவாதப் போராட்டம் தொடருமானல் எமது மக்களுக்கே மேலும் அழிவுகள் உண்டாகும். அத்துடன் எமது பிரதேசங்களே நாசமாக்கப்படும். இத்தகைய இனவாதப் போராட்டம் தமது எண்ணங்களை நிறைவேற்ற ஏகாதிபத்திய சக்திகளுக்கு மேலும் வாய்ப்பாக அமையும்" என்று தமிழீழ மக்கள் விடுதலைக்கழக செயலதிபர் திரு. உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்

'தமிழீழத்தின் குரல்' என்ற போதே மேற்கண்டவாறு தமது இயக்கத்தின் வானொ குறிப்பிட்டார் லிச் சேவையில், அவர் நேற்று திரு உமாமகேஸ்வரன் பிற்பகல் உரையாற்றினர் அப் தொடர்ந்து பேசியதாவது நாம் அப்பாவி சிங்களமக்களுக்கு எதிரானவர்களல்லர். சிங்கள முற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்தே ஏகாதிபத்திய சக்திகளை எதிர்த்து எமது போராட்டத்தை நாம் நடத்த

(12ம் பக்கம் பார்க்க)

மீண்டும் அனுமதி கிடைத்தால்

## முதல் விமானத்தில் இந்தியா திரும்ப பாலசிங்கம் முடிவு

(சென்னை)

அண்மையில் இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட கலாநிதி எஸ் ஏ பாலசிங்கம் அடுத்த வாரமளவில் இந்தியா திரும்பக் கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்தியா திரும்ப தன்னை அனுமதிக்க வேண்டுமென இவர் விடுத்த வேண்டுகோளை இந்திய மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டாக்டர் பாலசிங்கத்திற்கு லண்டனில் உள்ள இந்தியத் தூதரகம் புதிய விசா வழங்கும் என்றும், விசா கிடைத்தவுடன் முதலாவது விமானத்தில் இந்தியா திரும்பப் போவதாக அவர் சென்னையிலுள்ள தமது நண்பர்களுக்கு தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார். (து)

3 நாள் தொடர்ச்சியான

## உண்ணுவிரதம் இரு மாணவிகள் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணுவிரதமிருந்து வரும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக 3 நாள் தொடர்ச்சியாக உண்ணுவிரதமிருந்த யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் குழுவில் இரு மாணவிகள் நேற்று பிற்பகல் மயக்கமடைந்தனர். இவர்கள் உடனடியாக வைத்திய சிகிச்சையின் பின்னர் அவர்களின் வீடுகளுக்கு அனுப்பி

முல்லைத்தீவில்

## டீசல் கொள்ளைக்கு 'புலிகள்' கண்டனம்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ப. நோ. கூ, சங்கத்துக்கும், இ. போ. ச டிப்போவுக்கும் கொண்டுவரப் பட்ட டீசல் கொள்ளையடிக்கப்பட்டதைக் கண்டித்து 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கம் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

(12-ம் பக்கம் பார்க்க)

## கொள்ளைபோன பொருட்களை புளொட் மீட்டது!

(யாழ்ப்பாணம்)

எமது ஸ்தாபனத்தின் பெயரைப் பாவித்து தனிப்பட்டவர்களிடம் கொள்ளையடித்த ஒரு குழுவினை இனம்கண்டதும் அக்குழுவிடமிருந்து சில பொருட்களைக் கைப்பற்றியுள்ளோம்.

தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் (புளட்) வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரி

(12ம் பக்கம் பார்க்க)

## தேடுதல் படையின் படகு கடலில் கவிழ்ந்தது!

(மட்டக்களப்பு)

கடற்கரைப் பகுதியில் தேடுதல் நடத்திய பொலிஸ் அதிரடிப்படையின் வள்ளமொன்று நேற்று நீரில் கவிழ்ந்தது. ஆயினும் எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை அனைவரும் நீந்

(12-ம் பக்கம் பார்க்க)

வடமுனையில்

## 7 ஹெலிகாப்டர்களில் பெரும் தேடுதல்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வடமுனைப் பகுதியில் 7 ஹெலிகாப்டர்களில் பெரும் தேடுதல் வேட்டையொன்று நேற்று மேற்கொள்ளப்பட்டது இத் தேடுதலில், பொலிஸ்-இராணுவத்தைச் சேர்ந்த சுமார் 500 கமாண்டோக்கள் கலந்து கொண்டனர்.

தீவிரவாதப் பிரிவு ஒன்றின் முகாமொன்று இத் தேடுதல் வேட்டையின்போது கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது ஆயினும் அங்கு ஒருவரும் காணப்படவில்லை என்றும், சமைக்கப்பட்ட உணவுப் பண்டங்களே இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத் தேடுதலின் இறுதியில் அந்த முகாம் நாசமாக்கப்

(12ம் பக்கம் பார்க்க)

## ஈழம் செய்திப்பலகை

(யாழ்ப்பாணம்)

வெலிகடைச் சிறையில் பத்து தமிழ்சிறைக் கைதிகள் மீது துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டதாக "ஈழம் செய்திப் பலகை" யில் தெரிவிக்கப்பட்டுள்ளது

"ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி" ஈ பி ஆர் எல் எவ் ] தினசரி வெளியிட்டுவரும்.

'ஈழம் செய்திப் பலகை' இதனைத் தெரிவிக்கின்றது

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வெலிக்கடையில் 10 தமிழ்க் கைதிகள் மீது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. படுகாயத்துடன் இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதி?

(12ம் பக்கம் பார்க்க)

ROCK Engineers & Contractors in WATER SUPPLY WORKS

(Tube Wells, Plumbing. Fittings, Tanks) with Proper water investigation under supervision of well Experienced and Qualified Personnels.

குழாய்க் கிணறுகள் — நவீன இயந்திரம் மூலம், குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், சிறந்த முறையில், உத்தரவாதத்துடன் அமைத்துக் கொடுக்கப்படும்.

உங்கள் தேவைகள் (1) வீட்டுத் தேவையா? (2) பெரிய அளவிலான பயிர்ச்செய்கையா? 3 பெரிய அளவிலான தென்னந் தோட்டமா? (4) பெரிய அளவிலான அரிசி ஆலையா? (5) பெரிய அளவிலான தொழிற்சாலையா? ★ எதுவாகினும் தேவைக்கேற்ற தண்ணீர் பெற்றுத்தரப்படும்.

தொடர்பு கொள்ளவும்: றொக் எஞ்ஜினியர்ஸ்

கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

[கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாக]

541

# விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய, பழைய ஆங்கில தட்டச்சு யந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: நிர்வாகி சங்கர், J. E. C மேல்மாடி. (சாந்தி சினிமா முன்பாக) 22, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 545

தமிழ், ஆங்கில தட்டச்சுகள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. 52, (சுகின் அச்சகத்திற்கு முன்பாக), சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 506

நல்ல நிலையில் குறைந்த விலையில் குளிர்சாதனப் பெட்டி (Sisil, கைக்கடிகாரங்கள் (ஆண்-பெண்), அன்டறுவேறு சில சாமான்களும் விற்பனைக்குண்டு சனி, ஞாயிறு மற்ற நாட்களிலும் இல 1, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். 590

மானிப்பாய் சுபாற் சுந்தோருக்கு பக்கத்தில் மதிலுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: "Your Shop", மானிப்பாய் வடக்கு. மானிப்பாய். 593

கிச்சம் - நெல்லியடி வீதிக்கு அண்மையில் "பனம்பொருள் பல் தொகுப்பு நிலையம்", சந்தை என்பவற்றுக்கு அண்மையில் வீடு கட்டுவதற்கு உகந்த காணி 7 பரப்பு $10\frac{1}{2}$ குழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பெ. சிதம்பரம், 128, இராமநாதபுரம், கிளிநொச்சி. 549

வீட்டுத்தளபாடங்கள், சமையலறைப் பாவனைப் பொருட்கள், மிருதங்கம், சுருதிப் பெட்டி, றேடியோ, மேசை விளக்கு, நாயடைக்கும் கூடு, தரம், வேப்பம் பலகை நிராந்தி விற்பனைக்குண்டு. 66, இந்துக்கல்லூரி ஒழுங்கை. 592

பாவனைக்குகந்த நல்லரக 20, 10, 5, 3, $1\frac{1}{2}$ குதிரை சக்தி கொண்ட மோட்டார்கள் உடன் பாவனைக்கு. உகந்தவையும் திருத்தியமைக்கக் கூடியவையும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: ஏ. வேலுப்பிள்ளை, ஆசிரியர், உதிதமி இல்லம், கல்வளை, சண்டிலிப்பாய். 609

சிறந்த இன ஜேர்சி, நர்பகார் கறவைப் பசுக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கே. அருணாசலம், இளைப்பாறிய அதிபர், சிறுப்பிட்டி தெற்கு. 661

சகல வீட்டுத் தளபாடங்களும், மின்சார உபகரணங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். பத்மநாதன், C/O அம்பலவாணர், திருநெல்வேலி வடக்கு. [சட்டத்தரணி காங்கேசன் வீட்டிற் கருகாமையில்] 613

"யாழ் இந்துக்கல்லூரி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் நல்ல சுற்றாடலில் $1\frac{3}{4}$ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டாம். நேரில் தொடர்பு கொள்ளவும். மு. ராசகோபால், போஸ்ற்மாஸ்டர் 27, ஐயனார் கோவிலடி தட்டாதெரு, யாழ்ப்பாணம். 614

## தேவை

யாழ். நகரிலுள்ளபிரபலமான பேக்கரி ஒன்றுக்கு பாண், பனிஸ் தயாரிப்பதில் அனுபவமுள்ள பேக்கரி ஆட்கள் உடன் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல 578. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 578

வருமானம் குறைந்த குடும்பத்திலுள்ள இருவருக்கு வேலை வாய்ப்புத் தரப்படும். கண்ணியமாக நடந்துகொண்டால் புறம்பான தொழில் அமைத்துக்கொடுக்கப்படும். 15-20 வயதுக்குட்பட்டவர்கள் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 583, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 583

ஜெனரேட்டர், T.V, ரைப்ரைட்டர், கார், பிறிஜ், மோட்டார் சைக்கிள், டியூட்டறி மேசைகளும், ஆசனங்களும் O/L, A/L ஆசிரியர், ரவல் ஆபிசில் அனுபவமுள்ளவர் தேவை. பைலட் இன்ஸ்ரிடியூட். 151, செம்மணிறோட், (நாயன்மார்கட்டு சந்தியின் அருகாமையில்) நல்லூர். 607

எமது ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள T V Deck மற்றும் சகல றேடியோக்களும் திருத்தக் கூடிய ரெக்னிசன் தேவை. சாயி ரெலி ரேப், பிரதான வீதி, அச்சுவேலி. 290

### பயிற்சி

மூன்றுவருட மருத்துவ தாதிப்பயிற்சி ஆங்கில மொழி மூலம் அனுபவம் வாய்ந்த டாக்டர்களும் விரிவுரையாளர்களும் நியமிக்கப்பட்டு 30-8-85 ஆரம்பித்துவிட்டன. இன்னும் சில மாணவர்களுக்கே இடமுண்டு. 10-9-85க்கு முன் நேரில்வந்துவிண்ணப்பிக்கவும். உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 552

### குத்தகைக்கு

யாழ்ப்பாணம் இன்னக் கடைக்கு அண்மையில் 417, பீச் றோட்டில் சகல வசதிகளைக் கொண்ட கடை குத்தகைக்கு உண்டு; தொடர்புகொள்ளவும். துரைரத்தினம் 50, பாரதிவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 562

## தவறிவிட்டது

தெல்லிப்பளைச் சந்திக்கும் கோப்பாய் சந்திக்குமிடையில் ரூபா 1900/- தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் சந்திரா றெக்கோடிங் ஸ்ருடியோ கோப்பாய் சந்தியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 598

## சேவை

போக்குவரத்து தடை காரணமாக 9 ந் திகதி திங்கட்கிழமை கோழிக் குஞ்சு விநியோகிக்கப்படமாட்டாதென வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம். சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 606

## வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு: கே இராசகோபால். 428, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 596

---

நாளை வரை காலக்கெடு:

# சாராய விற்பனைக்கு தடை!

## குடிவகைகளும் பறிமுதலாகும் !!

## 'ரெலோ' அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

'தென் பகுதியில் இருந்து எந்த விதமான குடிவகைகளும் கொள்முதல் செய்துவந்தால் எமது இயக்கத்தால் பறிமுதல் செய்யப்படும். நாளை 9-ம் திகதியுடன் சாராயம் கொள்முதல் செய்வது நிறுத்தப்படவேண்டும். தமிழ்ப் பகுதியில் புதிய மினி சினிமாக்களை ஆரம்பிப்பதை உடன் நிறுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

'தமிழீழ விடுதலை இயக்கம்' நேற்று மேற்கண்டவாறு வேண்டுகோளை விடுத்துள்ளது. அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழீழப் போராட்டம் வெளிநாடுகளிலும் தமிழ் ஈழத்திலும் இன்று உக்கிரமெய்தி வருகின்ற இவ் வேளையில் போராட்டத்தை திசை திருப்பும் நோக்கில் சிறிலங்கா அரசு எமது பொருளாதாரத்தையும் மக்களையும் போராட்ட உணர்வில் இருந்து திசை திருப்ப முனைகிறது.

எந்தவொரு நாட்டில் போராட்டம் நடைபெறுகின்றதோ அந்தநாட்டு அரசு இப் பொருள்களை பெருமளவு இறக்குமதிசெய்து விநியோகம் செய்கின்றது. போதை பொருள் வெளிநாட்டு, உள்நாட்டு குடிவகை, ஆபாச சினிமா என்பவற்றை அனுபவிப்பதன் மூலம் ஒரு திசை திருப்பத்தையே ஏற்படுத்தி அவ் அரசு வெற்றி காண்கிறது. இப்படியான வரலாறு தமிழீழத்தில் ஏற்படுவதை நாம் அனுமதிக்கமுடியாது. எமது போராட்டத்துக்கு துணைநிற்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கி தமிழீழ போராட்டத்தை முன்எடுக்க வாரீர்!

நாம் சென்ற 25-ம் திகதி இயக்க பிரசுரம் வெளியிடு செய்து சாராயம் கொள்முதலை நிறுத்தி வர்த்தகர்களை ஒத்துழைப்பு வழங்கும்படி பணித்திருந்தோம் இதன் காலக்கெடு நாளை 9-ம் திகதியுடன் முடிவடைகின்றது. ஆகவே தென்பகுதியிலிருந்து எந்தவிதமான குடிவகைகளும் கொள்முதல் செய்துகொண்டு வந்தால் எமது இயக்கத்தால் பறிமுதல் செய்யபடும். மினி சினிமா உரிமையாளர்கள் புதிய தியேட்டர் ஏற்பாடு செய்வதை நிறுத்தவும். இதனை தமிழ்ப் பகுதியில் அனைவரும் சிரத்தையில் கொள்ளவும். (ஈ)

### அறிவித்தல்

பரி. ஜூட் வேளாங் கன்னி மாதா தாங்கள் தந்த நன்மைக்காக நன்றி.

(566) சி. எம்.

### யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அறிவித்தல்

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்குத் தேர்தல் 1985-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது. தேர்தல்கள் நடாத்துவதற்கான வாக்காளர் இடாப்பு 30-9-85-ல் உள்ளபடி தயாரிக்கப்படவுள்ளது. முன்னர் சங்கத்தில் வாக்களிக்கத் தகுதி உள்ள அங்கத்தவர்களாக இருந்து பெருந்தொகையானோர் முழுப் பங்கின் பெறுமதியான ரூபா 10/ ஐ செலுத்தாததின் காரணத்தால் வாக்களிக்கத் தகுதி அற்றவர்களாக உள்ளனர். 30-9-85 க்கு முன்னர் முழுப் பங்கொன்றைப் பெறுவதன் மூலம் சகல அங்கத்தவர்களும் வாக்காளர் இடாப்பில் தமது பெயரை இடம்பெறச் செய்து சங்கத்தின் கிளைக் குழு தேர்தலை நடத்த ஒத்துழைக்கும்படி வேண்டுகிறோம். புதிய அங்கத்தவர்களும் ரூபா 10/-ஐ செலுத்தி 30-9-85 க்கு முன்னர் சேரும்படி வேண்டுகிறோம்.

செயலாளர்,
யாழ். ப. நோ. கூ, சங்கம்,
602

### நல்லூர் ப. நோ. கூ. சங்கம் அறிவித்தல்

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல்கள் 1985-ம் ஆண்டு மார்கழி மாதத்தில் நடைபெற உள்ளது. இதற்காக 30-9-85 முடிய அங்கத்தவர் இடாப்பு முடிவுறச் செய்து வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படவுள்ளது.. எனவே, புதிய அங்கத்தவர்கள் 29-9-85 க்கு முன்னதாக ஒரு பங்கின் பெறுமதியான ரூபா 10/- செலுத்தி அங்கத்தவராக சேரும்படியும், பூரணமாக பங்குப் பணத்தைச் செலுத்தாத அங்கத்தவர்கள் தங்கள் கிளை முகாமையாளர்களுடன் தொடர்பு கொண்டு தமது அங்கத்துவத்தைப் பூரணப்படுத்திக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றார்கள்.

பொதுமுகாமையாளர்.
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
605

### இன்று

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் உயிருக்காப் போராடும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக கோண்டாவில் பொதுமக்கள். இன்று ஞாயிறு கோண்டாவில் ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலைய அருகாமையில் முழுநாள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவுள்ளனர்.

## நன்றி நவிலல்

கொக்குவில் மேற்கு, ஸ்ரீ வராகி அம்பாள் தேவஸ்தானத்தில் 2-9-85, திங்கட்கிழமை நடைபெற்ற எமது திருமணத்தின்போது வருகைதந்து எம்மை வாழ்த்தியும், பரிசில்கள் வழங்கியும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியும் கௌரவித்த நண்பர்கள் உறவினர்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

விக்னேஸ்வரராஜா, டில்க்குஷா
"வெண்மதி", ஆனைக்கோட்டை. 594

## வெற்றிடங்கள்

## ACCOUNTS TRAINEES

தகைமை:
- ★ G.C.E. (O/L) ஆங்கிலம், கணிதம், தமிழ் உட்பட 6 விசேட சித்தி.
- ★ G C E. (A/L) (மூன்று பாடங்களில்) சித்தி.
- ★ ஆங்கில தட்டச்சு அறிவுக்கு முன்னுரிமை.

சான்றிதழ்: நற்சாட்சிப் பத்திர பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

TAXMAN
55 1/2, கன்னாதிட்டி சந்தி,
யாழ்ப்பாணம். 601

## உருக்கமான வேண்டுகோள்

கோட்டைக்காடு மல்லாகத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணர் தேசிகநாதன் என்பவர் 28-8-85 புதன்கிழமை நண்பகல் 12-30 மணியளவில் நெல்லியடிக்கு சென்று திரும்பிவந்துகொண்டிருக்கையில் உடுப்பிட்டி என்னும் இடத்தில் இருந்து இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டார். ஆனால் இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை. எனவே இதில் சம்பந்தப்பட்டோர் இவரின் குடும்பம் மீது கருணை கொண்டு இவரை விடுதலை செய்யுமாறு உருக்கமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

(1) ஏழாலை தெற்கு, மேற்கு சைவ விருத்திச்சங்கம் (சாளம்பை கதிர்வேல் முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபை), மல்லாகம்.
(2) ஏழாலை தெற்கு, சுன்னாகம் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம்.
(3) சைவ வாலிபர் சங்க சனசமூக நிலையம், கோட்டைக்காடு, மல்லாகம்.
(4) மக்கள் சபை ஏழாலை தெற்கு, ஸ்ரீமுருகபுரம்.
(5) ஞானகலா சனசமூக நிலையம், மயிலங்காடு கிழக்கு ஏழாலை.
(6) கிராமிய விழிப்பு மன்றம், மயிலணி, சூராவத்தை, அளவாவோடை, கோட்டைக்காடு.

(ஆறு ஸ்தாபனங்கள்.) 610

# வார மலர்

ஈழநாடு

EELANADU VARAMALAR

## இலங்கையில் உள்ள தமிழ்த்தீவிரவாதிகளுக்கு சிங்கப்பூர் சுவீடனிடமிருந்து கொள்வனவு செய்த ஆயுதங்களை விற்பனை செய்ததா?

தமிழ்த் தீவிரவாதிகளுக்கு சிங்கப்பூர் ஊடாக சுவீடனில் உற்பத்தியான ஆயுதங்கள் கிடைத்தனவா?

- எமது நாட்டுப் பத்திரிகையாளருக்கு எழுந்த சந்தேகம் இது

சுவீடனின் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆண்டர்ஸ் தூர்க்பேர்க் அண்மையில் இலங்கையில் வந்திருந்தபோது அவரிடமே இக் கேள்வி எழுப்பப்பட்டது.

தமது நாட்டின் ஆயுத உற்பத்தி - விற்பனைபற்றி சுவீடிஷ் பாதுகாப்பு அமைச்சர் நீண்ட விளக்கம் ஒன்றை அளித்தார்.

''ஆயுத விற்பனை தொடர்பாகச் சிங்கப்பூர் எம்முடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி எமது ஆயுதங்களை வேறொரு நாட்டுக்கு விற்பனை செய்தது. இது தொடர்பாக இப்போது விசாரணை நடைபெற்று வருகிறது.

இவ்விசாரணை ஒரு முடிவு ஏற்படும் வரை அந்நாட்டுக்கு நாம் ஆயுதங்களை விற்பனை செய்யமாட்டோம்''

ஆயுத ஒப்பந்தத்தை மீறித் தமிழ்த் தீவிரவாதிகளுக்குத்தானா சிங்கப்பூர் அந்த ஆயுதங்களை விற்பனை செய்தது என்ற வினவுக்கு

# தமிழ்த் தீவிரவாதிகளுக்கு

# சிங்கப்பூர் ஊடாக

# சுவீடன் ஆயுதங்கள்?

அவர் தெரிவித்ததாவது:

''எமது நாட்டின் 80 வீத ஆயுத தேவைகளை எமது உற்பத்திகளைக் கொண்டே நிவர்த்திக்கின்றோம்.

இந்தியா, மலேஷியா, ஆர்ஜன்டீனா, நோர்வே, எதியோப்பியா உட்பட 18 நாடுகளுக்கு நாம் ஆயுதங்களை விற்பனை செய்கிறோம். இந் நாடுகளுள் ஆறு நாடுகள் உள்நாட்டு யுத்தம் போன்ற பிரச்னைகளில் சிக்கியுள்ளன. எது எப்படி இருந்த போதிலும் நாம் எமது ஆயுத விற்பனைக் கொள்கையில் கண்டிப்பாகவே இருக்கிறோம்.

### சிங்கப்பூர் ஆயுத விற்பனை இடைநிறுத்தம்

சிங்கப்பூருக்கு ஆயுதங்களை விற்பனை செய்தோம். அதனைத் தற்போது இடை நிறுத்திக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

திரு. தூர்க்பேர்க், ஆம் என்றும் கூறவில்லை, இல்லை என்றும் கூறவில்லை.

சிங்கப்பூர் 3வது நாடு ஒன்றுக்கே ஆயுதங்களை விற்பனை செய்து இப்போது சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளது என்று கூறிய அவர் அந்த 3வது நாடு எது என்பதைக் கூறாது தப்பித்துக்கொண்டார்.

''நாம் விற்பனைசெய்யும் ஆயுதங்கள் எக்காரணம் கொண்டும் 3-வது நாடு ஒன்றுக்குச் செல்லக்கூடாது. எமது ஆயுத விற்பனைக் கொள்கையில் நாம் கடைப்பிடிக்கும் கண்டிப்பான கட்டுப்பாடு இது'' என்றும் வலியுறுத்தினார் அவர்.

கொத்மலை நீர்த்தேக்க அணைக்கட்டு திறப்பு வைபவத்தில் கலந்துகொள்ள இலங்கை வந்த சுவீடிஷ் பாதுகாப்பு அமைச்சர் ஹோட்டல் ஒப்ரோயில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

பட்டது.

அமைதியான நாடான இலங்கையில் ஆயுத வன்முறைகள் இடம்பெறுவது குறித்து சுவீடன் ஆழ்ந்த கவலைகொண்டுள்ளது. அத்துடன் இலங்கைப் பிரச்னைக்கு அமைதியான தீர்வு ஒன்று சாத்தியமென்றே நாம் நம்புகிறோம்.

திம்புப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகி அதன் மூலம் இந்நெருக்கடிக்கு நல்லதொரு முடிவு ஏற்படுமென்பதே எமது ஆவலும் நம்பிக்கையுமாகும்.

### அரசியல் தஞ்சம்

2-வது உலக மகாயுத்த அகதிகள் முதல் இலங்கை அகதிகள் வரை பல நாடுகளிலும் பல்வேறு நெருக்கடிகளிலும் சிக்கிய அநேகர் எமது நாட்டில் அரசியற் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள். இது தொடர்பான எமது சட்டதிட்டங்கள் மிகவும் கண்டிப்பானவை. இலங்கைத் தமிழர் மிகவும் குறைந்த தொகையினரே சுவீடனில் உள்ளனர்.

அரசியல் ரீதியில் ஒருவர் பாதிக்கப்பட்டால் அவர் தமக்கு அரசியல் உரிமைகள் மறுக்கப்படுவது குறித்து நிரூபிக்கவேண்டும். இன்றேல் அவருக்கு அரசியல் அடைக்கலம் கிடையாது.

தமது நாடுகளிலுள்ள அரசியற் சூழ்நிலையைப் பயன்படுத்தித் தமது பொருளாதாரத்தை வளர்க்கச் சிலர் முற்படுகிறார்கள்.

### இந்து சமுத்திரம் சமாதான வலயம்......

இந்து சமுத்திரம் சமாதான வலயமாகப் பிரகடனம் செய்யப்படவேண்டும் என்ற பிரேரணை நீண்டகாலமாக நான் ஐ. நா வில் இருந்த காலம் முதல் பிரேரணையாகவே இருந்துவருகிறது. இப்பிரேரணைக்கு ஆதரவாகவே இருக்கிறது. சகல நாடுகளும் ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே இதனை நிறைவேற்ற முடியும்

அணிசேரா இயக்கத்தில் சுவீடன் அங்கத்துவ நாடாக இருந்தபோதிலும் அந்த இயக்கம் தோன்றுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்தொட்டே சுவீடன் அணிசேராக் கொள்கையைப் பின்பற்றி வருகிறது''

### சுவீடன் கவலை

''இலங்கையின் இனப் பிரச்னை குறித்து சுவீடன் மிகுந்த கவலைகொண்டிருக்கிறது. இந் நெருக்கடி குறித்து நாம் நன்கு ஆராய்ந்து வைத்திருக்கிறோம். இலங்கைத் தலைவர்களுடன் நான் நடத்திய பேச்சுவார்த்தையின்போதும் நான் இதுபற்றிப் பிரஸ்தாபித்தேன்.

எமது பாராளுமன்றத்திலும் இப்பிரச்னை குறித்து ஆராயப்

# அடிமட்ட அரசியல்

'மட்டி' அரசியல், பொதுமக்கள் நலனுக்கு நீண்டகாலம் நிட்டூரம் செய்து வந்திருக்கிறது.

அமைச்சர்களும் நிபுணர்களுமே மக்கள் தேவைகளைக் கருத்தில் கொண்டவர்களென்று இன்று எவரும் நம்புவதில்லை.

அண்மைக்காலங்களில் அப்பாவி மக்கள் மீது ஏவிவிடப்பட்ட ஒருவகையான அபிவிருத்தி என்னும் பேய், தொழில் நுட்பம் என்னும் மந்திரத்துக்கு ஆடி வருவதால்; நவீன நாகரிகம் பல்வேறு நாகரிக நோய்களை உருவாக்கி வருகிறது.

நவீன மருந்துகள் அபாயங்களை தோற்றுவிக்கின்றன. நிபுணர்களும் மருத்துவ ஆராய்ச்சியும் கோடிக்கணக்கான டொலர்களைச் செலவு செய்யும் மருந்துக் கைத்தொழிலும் காரணமாக அமைகின்றன.

மூன்றும் உலக நாடுகளின் அரச அபிவிருத்தித்திட்டங்கள் ஒப்பந்தக்காரரின் தயவில் சிக்கித்தவிக்கின்றன: வேலைகளைப் பெருக்கி நிறைசேரியின் பலத்தைச் சுருக்கி (Contract) பட்டினிப் பட்டாளத்தை அதிகரிக்கவே இவை இன்று உதவுகின்றன.

இந்த நிலைமையை மாற்றியமைக்க, உணர்வு மிக்க சமூகத்தலைவர்கள் தாமாகவே வந்து தொண்டாற்றும் அடிமட்ட அரசியல் இன்று உருவாகின்றது.

இறக்குமதி நுகர்ச்சிப் பொருட்களில் பொதுமக்கள் கிடந்து புரளாமல் தடுத்து ஆக்கபூர்வமான பணிகளில் அவர்களை ஈடுபடுத்த அரசாங்க சார்பற்ற அமைப்புகள் அவசியம்.

# பப்பா பெயர்

# பப்பாபப்பா பெயர்...

அண்மையில் பாரிஸ் சென்று அடைக்கலம் கோரிய இலங்கை வாலிபர் ஒருவருக்கு அங்கு பொலிஸ் நிலையத்தில் விசா எடுக்கச் சென்ற போது ஏற்பட்ட அனுபவத்தை 'ஈழநாடு' வாசகர் ஒருவர் பின்வருமாறு விபரிக்கிறார்.

இலங்கையைச் சேர்ந்த ஒருவர் விசா பெறுவதற்காக வெளி நாட்டிலுள்ள பொலிஸ் நிலையம் ஒன்றுக்குச் செல்கின்றார் அந்நாட்டு மொழி தெரிந்த நண்பரொருவரை, மொழிபெயர்ப்புக்காக அழைத்துச் செல்கின்றார் வெள்ளைத் தோலையுடைய சுமார் 40வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் குறுக்கு விசாரணை செய்கின்றார்.

'Pappaper'? என்ற அப்பெண்ணின் முதலாவது கேள்வியின் மொழி பெயர்ப்பிற்காக தமது நண்பரைப் பார்க்கின்றார் அந்த நபர். அந்த மொழியில் அப்படி யொன்றில்லையே எனச் சிந்தித்துத் தடுமாறியவாறு அந் நாட்டு மொழியில் திரும்பவும் சொல்லுங்கள்'' என்று கேட்கின்றார் நண்பர்.

மிகவும் ஆறுதலாக 'பப்பா பெயர்' என்று கேட்கின்றார். நண்பர்கள் இருவருக்கும் ஆச்சரியம் உட்பட்ட திகைப்பு அப்பெண் தொடர்ந்து கேட்ட கேள்விகள் இதோ:-

பப்பா பெயர்
பப்பா பப்பா பெயர்
பப்பா வயசு
அம்மா பெயர்
தாத்தா பெயர்
அம்மா வயசு

(10-ம் பக்கம் பார்க்க)

# கோடீஸ்வரி



உலகிலேயே சிறந்த செல்வவளமுள்ள பணக்காரர்களில் பிரிட்டிஷ் மகாராணியும் ஒருவராவர். இவரது முதலீடுகளுக்குத் தினமும் ஏழாயிரம் ஸ்டேர்லிங் பவுண் வட்டியாகக் கிடைக்கிறது.

இவரது பெயரில் ஒன்பது கோடி பங்குகள் இருக்கின்றன.

தொளாயிரம் ஏக்கர் காணி இவரது சொத்துக்களில் முதன்மையானது. இவற்றைவிட மாட மாளிகைகள், ஆபரணங்கள் இவற்றின் பெறுமதி ஏராளம் ஏராளம்.

பிரிட்டிஷ் அரசசபை இவரது செலவுக்கு வருடா வருடம் மூன்று மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்களை வழங்குகின்றது.

இவற்றை விட பல கோடி ரூபா பெறுமதியான தபால் தலைகளும் இவரிடம் இருக்கின்றன.


—சச்சின்

# இது ஒரு முன்னுரை

வரலாற்றை இவ்வாறும் கூறலாம் என ''கடற் கோட்டை'' மூலம் நான் கண்ட இலக்கணத்தை மீண்டும் ஒரு தடவை செயற்படுத்தும் வகையில், 'கந்தவேள் கோட்டம்' பிறக்கிறது. ஆறு நூற்றாண்டுகளின் யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றை இந்த நவீனம் பேசும். நூற்றாண்டுகள் கூட வாழ இயலாத மனிதர், எவரும் இந் நவீனத்தின் ஆறு நூற்றாண்டு வரலாற்றின் காவிய நாயகனாக முடியாது எனவே இந் நவீனத்தின் காவியத்தலைவன் எம்பெருமான் கந்தவேள் முருகனே ஆவார்.

நல்லூரில் அவர் கோயில் கொண்ட வரலாறு இந்த நவீனத்தின் ஆதாரக் கருப்பொருள். இந்நவீனம் நான்கு அங்கங்களைக் கொண்டது; ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல் என நான்கங்க வரலாறு.

''சங்கபோதியாம் புவனேகபாகு நலமுறும் யாழ்ப்பாண நகரி கட்டுவித்து நல்லூர்க் குலவிய கந்தனுக்குக் கோயிலொன்றமைப்பித்த கதை: ஆக்கல்



புகழ் பூத்த நல்லூர்க்கந்தசுவாமி கோயிலைப் பதினேழாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில், போர்த்துக்கேயர் தரைமட்டமாக்கி அத்திவாரத்தையும் கிளறிவிட்ட கதை: அழித்தல்.

' நல்லைநகர் வாழ் மங்கை உமை பாலன் செங்கை வடிவேலன் மயில்வாகனக்கடவுளுக்கு' இரகுநாத மாப்பாண முதலியார் மீண்டும் திருக்கோயில் அமைத்தல் கதை: காத்தல்.

'மண்ணிற் பிறப்பவர்வேண்டும் வரங்கள் மகிழ்ந்தளிக்க, எண்ணியவேற் பெருமானுறை கோயில் இதுவெனவே, கண்ணிற்கு அழகுதரும் கோபுரமும் கனமணியும் விண்ணிற்குணர்த்தும் நல்லையம் பதி கண்டு' சித்தர்களான கடையிற்சுவாமிகள் முதல் தேரடிச் செல்லப்பா சுவாமிகள் உட்பட யோக சுவாமிகள் வரை நல்லூர்த்திருக்கோயில் வீதிகளில் உலாவிய கதை: அருளல்.

''எப்பவோ முடிந்த காரியம். நாம் ஒன்றும் அறியோம்''

அடுத்தவாரம் சந்திப்போம்.

★ செங்கை ஆழியான்

நினைவில் நிறைந்த அரசியலார்சிலர்—14

# சுந்தரரைத்தேடி வந்த மந்திரிபதவி!

சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் முதலாவது பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் 1947ம் ஆண்டில் நடைபெற்றது. தேர்தலின் பின் திரு. டி. எஸ் சேனநாயகா பிரதம மந்திரியாகப் பதவியேற்றுத் தமது முதலாவது அமைச்சரவையை உருவாக்கினார். இந்த அமைச்சரவையில் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா சுகாதார அமைச்சராகவும், உள்ளூராட்சி அமைச்சராகவும், சபை முதல்வராகவும், சிரேஷ்ட அமைச்சராகவும் நியமிக்கப் பட்டார். சேர் ஜோன் கொத்தலாவல, ஜே. ஆர். ஜெயவர்த்தன, டட்லி சேனநாயகா முதலானோரும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். இந்த அமைச்சரவையில்தான் செல்லப்பா சுந்தரலிங்கமும் வர்த்தக வணிக அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அமைச்சரவையில் தமிழர்கள் சேராவிட்டால் இலங்கைக்குப் பூரண சுதந்திரம்வேண்டுமென்று கோருவதற்கு வாய்ப்பிருக்கமாட்டாதென்றும், இலங்கை மேலும் முன்னேறுவதற்குச் சாத்தியமிருக்காதென்றும் திரு டி. எஸ் சேனநாயகா சுந்தரருக்குக் கூறினார் இச்சந்தர்ப்பத்தில் சேர் ஒலிவர் குணதிலகாவும் உடனிருந்தார். சோல்பரி அரசியல் அமைப்பு, பூரண டொமினியன் அந்தஸ்து வழங்கியிருக்கவில்லை. எனவேதான் பூரண டொமினியன் அந்தஸ்தைப் பெறுவதற்குத் தமிழ் மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் தேவையாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில்தான் டி. எஸ். சேனநாயகா சுந்தரரைத் தமது அமைச்சரவையில் சேர்ந்துகொள்ளுமாறு வற்புறுத்தி வந்தார். இதற்கு அவர் சரியான பதில் கொடுக்காமற் தட்டிக்கழித்து வந்தார்.

சேர் ஜோன் கொத்தலாவலயும் சேர் ஒலிவர் குணதிலகாவும் பல தடவைகள் சுந்தரரின் இல்லத்திற்குச் சென்று அமைச்சரவையில் சேர்ந்து கொள்ளுமாறுவலியுறுத்தினர். இதன் பின்னர்தான் ''சில வாக்குறுதிகளைப் பெற்றுக் கொண்டு'' சுந்தரர் அமைச்சரவையில் சேர்ந்து ஒத்துழைத்தார்.

அமைச்சர் பதவியைத் தேடி சுந்தரர் திரிந்தார் என்ற தோரணையில் பண்டாரநாயகா மந்திரிசபையிலிருந்த மந்திரியொருவர் குறிப்பிட்டதைக் கண்டித்த சுந்தரர். 'உண்மை உங்களுக்குத் தெரியாது' என்று கூறி நடந்த விபரத்தைப் பாராளுமன்றத்திலேயே எடுத்துச் சொன்னார். அப்போது திரு. பண்டாரநாயகாவும் அங்கிருந்தார், எவரும் மறுத்துப் பேச முடியவில்லை!

இதேபோல் அமைச்சர் பதவியில் அவர் தொடர்ந்தும் ஒட்டிக்கொண்டுமிருக்கவில்லை இந்தியர் - பாகிஸ்தானியர் பிரஜாவுரிமை மசோதாவை எதிர்த்து அமைச்சர் பதவியை இழந்தார்.

## யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸிலும் சுந்தரர் அங்கம் வகித்துப் பணிபுரிந்திருக்கிறார். 1941ம் ஆம் ஆண்டில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் கூட்டமொன்று யாழ்ப்பாணத்தில் திரு சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. அக் கூட்டத்திற்குப் பலரும்அழைக்கப்பட்டிருந்தனர். அப்பொழுது காலி நகர மேயராக இருந்த திரு. டபிள்யூ. தகநாயகாவும் அழைக்கப்பட்டிருந்தார், காலி நகர மேயர்

**எஸ். எம். ஜி.**

வருகிறாரென்று அவரை அழைத்துவருவதற்காக வாலிபர் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் சிலர் மோட்டார் காருடன் ரயில் நிலையத்திற்குச் சென்று காத்திருந்தனர். ரயிலும் வந்தது. முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புப் பெட்டிகளில் தேடிய பின் ''மேயர் வரவில்லை?'' என்ற முடிவுடன் திரும்பினர். ஆனால் மேயர் தகநாயகா மூன்றும் வகுப்பில் பயணம் செய்து ரயில் நிலையத்திலிருந்து இறங்கி பஸ் ஏறி கூட்டம் நடந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். சுந்தரர் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பண்டாரநாயகாவின் வகுப்புவாதப் போக்கை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

(அடுத்த வாரம் முடியும்)


3-வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி வாசுகி இராசரத்தினம்



மாவிட்டபுரம் பட்டிக்கடவையைச் சேர்ந்த இராசரத்தினம் பரமேஸ்வரராணி தம்பதிகளின் செல்வப் புதல்வி வாசுகி 8-9-85 அன்று தனது மூன்றாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

அவரை அப்பா, அம்மா, பப்பா, அம்மம்மா சவுதி சிவா மாமா, பவுன் மாமா, நிதி, மாமா, சோதி சித்தி, பெரியப்பாமார் மற்றும் உற்றார் உறவினர் எல்லாம் வல்ல இறைவன் அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றனர். 298


இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நிகழ்ந்த முதலாவது 'டெஸ்ட் கிரிக்கெட்' பந்தயம் மிகவும் விறுவிறுப்பான கட்டத்தில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இலங்கை வீரர்களைப் பொறுத்த வரை இப்பந்தயம். 'டெஸ்ட்' விளையாட்டில் குறிப்பிடத்தக்களவு பக்குவத்தை அவர்கள் அடைந்துள்ளதை அறியமுடிந்தது.

ருமேஷ்ரத்நாயக்கா, சாலியா அஹங்கம, அஸந்தா டி மெல் போன்ற பந்து வீச்சாளர்களின் ஆட்டம் சிறப்பானதாகவே இருந்தது.

இந்திய விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவதில் மட்டுமல்லாது ஓட்ட எண்ணிக்கையைக் குறைப்பதிலும் இவர்கள் சளைக்காமலிருந்தது முக்கிய அம்சமாகும்.

## அமல்சில்வா

இவர்கள் தவிர விக்கெட் காப்பாளர் அமல் சில்வா. துடுப்படி வீரர்கள் அர்ஜுன ரணதுங்க, ரஞ்சன்மடுகல்ல ஆகியோரும் மனம் வைத்து சிறப்பாக ஆடினார்கள்.

இந்த ஆட்டம் விக்கெட் காப்பாளர் அமல்சில்வாவை ஒருசாதனைவீரராகும் நிலைக்கும் உயர்த்தியது. எனினும் துரதிர்ஷ்டவசமாக '9 கட்சசு'க்களுடனேயே அவர் நிற்க வேண்டியதாயிற்று. இல்லையேல் '10 கட்சுக்களை' ஒரு இன்னிங்ஸில் எடுத்து ஒரு டெஸ்ட் சாதனையை அவரால் ஏற்படுத்திருக்க முடியும். முன்னர் இங்கிலாந்து விக்கெட் காப்பாளர் ஒருவரே 'பத்து டெஸ்ட் காட்ச்' சாதனையை ஏற்படுத்தியிருந்தார்.

இலங்கைப்பந்து வீச்சாளர் சாலியா அஹங்கமவுக்கு இது முதலாவது டெஸ்ட் பந்தயமாகும். இருந்தபோதிலும் மிக அனுபவம் மிக்க ஆட்டக்காரர் போல அவர் மிகமுக்கிய விக்கெட்டுக்களை எடுத்து ஓட்ட எண்ணிக்கையையும் குறைத்தார்.

## முதலாவது செஞ்சரிகள்

ருமேஷ் ரத்நாயக்கா இந்த டெஸ்ட்டில் மொத்தம் 9 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இதன் மூலம் அவரால் இந்த டெஸ்டின் சிறந்த ஆட்டக்காரராக வரமுடிந்தது.

அர்ஜுனரணதுங்க, ரஞ்சன் மடுகல்ல ஆகியோரின் துடுப்படியும் குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் இருவரும் தமது முதலாவது 'டெஸ்ட் செஞ்சரி'களைப் போட்டதும் விசேட அம்சமாகும்.

முதலாவது இன்னிங்ஸில் இலங்கை தடுமாறிய போது இவர்கள் இருவரின் ஆட்டமுமே இலங்கைஅணிக்கு தோள் கொடுத்து நிலைமையை சுதாரித்துக்கொண்டது.

## சோபிக்கவில்லை

இந்தியஅணியைப்பொறுத்த வரை அதன் டெஸ்ட் ஆட்டம் சோபிக்கவில்லையென்றே கூறலாம்.

அவர்கள் 'மட்டுப்படுத்தப் பட்ட ஆட்டத்துக்கு'ப்போலவே டெஸ்ட்டுக்கும் தம்மை ஆயத்தப்படுத்தியிருந்தவர்களாகக் காணப்பட்டனர்.

டெஸ்ட்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் அவர்கள் ஆடிய துடுப்பாட்டமும், பீல்டிங்கும் இதையே புலப்படுத்தின.

ஸ்ரீகாந்த், அசாருதீன், கபில் தேவ், கவாஸ்கர் ஆகியோரிடமிருந்து இலங்கை ரசிகர்கள் அதிகம் எதிர்பார்த்தார்கள். ஆனால் இவர்கள் தமது பொறுப்பை உணராமல் இலங்கைப் பந்துவீச்சாளர்களை சாமானியமானவர்களாகக் கருதியவர்கள் போன்றே விளையாடினர்.

## கவாஸ்கரின் முன்மாதிரி

ஸ்ரீகாந்த், அசாருதீன், கபில் தேவ் ஆகியோர் தேவையற்ற விதத்தில் பந்துகளுக்குத் துடுப்பைக் கொடுத்து ஆட்டத்தைப் பாழாக்கினர். அதுமட்டுமல்ல, டெஸ்டுக்கு வேண்டிய நிதானம் இவர்களிடம் இருக்கவில்லை.

கவாஸ்கர் முதலாவது இன்னிங்ஸில் 52 ஓட்டங்கள் வரையே அடிக்க முடிந்தது. ஆயினும் அதுவரையிலான அவரது ஆட்டம் அவரது சிறந்த துடுப்படியை வெளிக்காட்டியது.

தேவையற்ற பந்துகளுக்கு அவர் துடுப்பைக் கொடுக்கவில்லை. தமக்கு அடிக்கக் கூடியவற்றுக்கே துடுப்பைக் கொடுத்து மிக நிதானமாகஆடினார். இலங்கை வீரர்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவின் வளர்ந்துவரும் துடுப்

1வது டெஸ்ட்:

# இந்திய அணியிடம் எதிர்பார்த்தது இடைக்கவில்லை!

★ ராதன்

பல வீரர்களுக்கும் இது ஒரு சிறந்த பாடமாக விளங்கியது.

## ராஜ்புட், வெங்கசாகர்

இந்திய அணியின் புதிய முகம் லாலசன்ட் ராஜ்புட்டின் துடுப்படி மிகவும் சிறப்பாக இருந்தது. ராஜ்புட் இரு இனிங்ஸ்களிலும் ஆரம்ப ஓட்டக்காரராகவந்து மிக அவதானமாக இருந்தார். ஏனைய தமது அணி ஆட்டக்காரர் போலல்லாது. 'Off' பகுதியில் வந்த பந்துகளை இவர் மிக அவதானமாகக் கையாண்டார்.

திலீப்வெங்கசாகரின் துடுப்படியும் நன்றாக இருந்தது. இரு இன்னிங்ஸ்களிலும் அடிக்க வேண்டிய பந்துகள் அனைத்தையும் அவர் விட்டுவைக்கவில்லை ஆயினும்இரண்டாவது இன்னிங்ஸில் அவருக்கு தமது 10-வது செஞ்சரியை போடும் வாய்ப்பு, மனீந்தர்சிங்கின் 'கிளீன் அவுட்'டினால் 98 ஓட்டங்களுடனேயே நின்று விட்டது.

இந்திய அணி பந்து வீச்சாளர்களின் கட்டுப்பாட்டால் நெருக்கடியை எதிர்நோக்கியது. கபில். சேத்தன், ரவி சாஸ்த்திரி ஆகிய மூவருமே நிலைமையை சமாளிக்கவேண்டியதாயிற்று.

## லக்ஷ்மன் ரோஜர்பின்னி

எல்லோரும் எதிர்பார்த்த லக்ஷ்மன் சிவராமகிருஷ்ணன் துரதிஷ்டவசமாக கையில் ஏற்பட்ட காயத்தினால் ஆடவில்லை.

ஆயினும் இரண்டாவது டெஸ்டில் இவரும் ரோஜர் பின்னியும் சேர்ந்து கொள்வது ரசிகர்களுக்கு ஒரு சிறந்த ஆட்டத்தைப் பார்க்கும் சந்தர்ப்பத்தை வழங்குமென நம்பலாம்.

இந்திய அணியைப் பொறுத்தவரைமுதலாவதுடெஸ்ட்டை அது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டமாகவே விளையாடியது எனக் கூறவேண்டும். துடுப்படியில் மட்டுமல்லாது. இறுதி நேரத்தில் மேலதிகமாக 11 ஓவர்கள் வழங்கப்பட்டபோது அவர்கள் தமது 'Limited overs' பாணியிலேயே இலங்கையுடன் இந்த டெஸ்ட்டைச் சரிசமமாக்க முடிந்தது.


சுத்தமான

**விளவு கற்பூரம்**

சீனாவின் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடனும், சீனாவின் தரத்திற்கு அமையவும் முதன் முதலாக இலங்கையில் தயாரிக்கப் பட்டது.

இப்பொழுது தாராளமாக கிடைக்கும்;
மொத்த வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு.

தொடர்பு கொள்ளவும்:

விநியோகஸ்தர்:

**பிரபா ட்ரேடிங் கம்பெனி,**

31–31A, கபோஸ் லேன், கொழும்பு-11.

Phone: 29426

## எமது சிறுகதை

# மாற்றம்

காலை ஆறு மணி; தமிழ புரத்தில் பனந்தோப்புக்களுக் கூடாக நாகம்மாக்கிழவி 'விறு விறு' என நடந்துகொண்டிருக் கிறுள். அடிக்கடி அவள் தனது மடியைத் தொட்டுப்பார்த்துக் கொள்கிறுள்.

வட்டித்தம்பர் வெளிக்கிட்டு வாய்க்குள் ஏதேன் ஊற்றுவ தற்குள் அவரைச் சந்தித்துத் தான் அடைவுவைத்த சங்கி லியை மீட்டுவிட வேண்டு மென்ற அவசரத்தில் நடந்து கொண்டிருந்த அவள் மடி நிறையப் பணநோட்டுக்கள்.

வட்டித்தம்பர் வீட்டை அடைந்த நாகம்மாக்கிழவி, அவர் தூக்கம் கலையும்வரை காவல்இருந்து தன் கணக்கைப் பார்க்குமாறு கேட்டதும் தம் பர் கொப்பியை எடுத்துக் கணக்குப் பார்த்துவிட்டுச் சொன்னர்:

'பதினையாயிரத்துஎண்ணூறு வருகுது நாகம்மா'

''ஏனையா? பதினையாயிரம் தானே வரும்?''

கணக்குப் படிக்காவிட்டா லும் நாகம்மாவுக்குக் கணக்கு கள் தெரியும் சீட்டுக்கணக்கு களையே வாயாலே பார்ப்பவ ளாச்சே.

''என்ன கணக்கிலை அப்பி டிச் சொல்லிற''

''காசு தரக்குள்ளே வட்டிக் காசெண்டு எண்ணூறு கழிச் சுக்கொண்டல்லே ஐயா தந்த னீங்க'' நாகம்மா இப்படிச் சொன்னதும் வட்டித்தம்பர் திடுக்கிட்டாரெனினும் திடீ ரெனத் தன்னைச் சுதாரித்துக் கொண்டார். இதைப்போல எத்தனை பேரைக் கண்டவர் தம்பர்.

இடத்திலே அதை அடைவு வைத்துத்தான் பணம் எடுத் துத் தந்ததாகவும், தன்னிடம் இப்போது காசுப்புழக்கம் குறைவு என்றும். இனிஇந்தக் காசையும் வட்டியையும் கொண்டுபோய்க் கொடுத்துத் தான் நகையை எடுத்துக் கொண்டுவந்து தரவேண்டு மென்றும் அடைவுகாரர்களுக் குக் கதை சொல்வது தம்ப ருக்கு வழக்கமாகிவிட்டஒன்று. ஊரையும் உலகத்தையும் 'பேய்க்காட்டுறதுக்காக'த் தம் பர் அண்மைக்காலமாக விடும் இந்தச் சரடில் பலருக்கு நம் பிக்கையில்லையாயினும் நம்பு வதுபோல் நடித்துவிட்டு மறு நாள் வந்து பொருளைப்பெற் றுச்செல்வது பலருக்கும் இப் போது பழக்கமாகிவிட்டது. நாகம்மாவும் மறு பேச்சின்றி மறுநாள் வருவதாகச் சொல் லிச் சென்றுவிட்டாள். என்ன செய்வது? எல்லாம் நம்பிக்கை யில் தானே ஓடுகிறது நாகம்மா மட்டும் விதிவிலக் காக முடியுமா?

மறுநாள் காலை சங்கிலியைப் பெறுவதற்காகத் தம்பர் வீட் டுக்கு வந்த நாகம்மாவுக்கு இன்னுமொரு பேரிடி காத்தி ருந்தது தான் அடைவுவைத்த இடத்திலே கூடியவட்டி கேட் கிருர்களென்றும் இன்னும் இருநூறு ரூபா கூடக்கொடுக்க வேண்டுமென்றும் குண்டொன் றைத் தூக்கிப்போட்டார் தம் பர் நாகம்மா மனதார வேத னைப்பட்டாள். தன் இஷ்ட தெய்வத்தின் மீது பழியைப் போட்டாள் ஆனல் இரவல் வேண்டிவைத்த நகையை மீட்கவேண்டுமே என்ற கவலை யில் முடிச்சை அவிழ்த்து இரு நூறைக் கொடுத்துவிட்டு நகையைப் பெற்றுக்கொண்டு

''நாகம்மா, பேய்க்கதை பறையாதை. என்ரை சீவியத் திலை வேண்டினகாசைச் சேர்த் துக் கணக்குச் சொன்னது கிடையாது. நான் முதல்மாத வட்டியைக் கழிக்கவெளிக்கிட நீ செஞ்சிக்கதுதாடிக் கழிக்க வேண்டாமெண்டு முழுக்க வேண்டிக்கொண்டு போயிற்று இப்ப என்ன கதைக்கிற?''

தம்பர் மனசாரப் பொய் சொன்னர்.

இது அவருடைய வழமை யான கதை எனினும் கதை யில் அவர் காட்டிய கோபம், அவர் ஒரு தூய்மையானவர் போலக்காட்டியது நாகம்மா விக்கித்துப்போனுள்! ஆயினும் இனித்தம்பரோடு கதைத்தால் தனது பொருளுக்கும் நாசம் வந்து சேருமோ என்ற அச்சத் திலுலோ என்னவோ, நாகம்மா வாய்க்குள் முணுமு ணுத்துக்கொண்டு காசை எண் ணித் தம்பரிடம் கொடுத்தாள். தம்பருக்கோ பணத்தைப் பற் றித்தான் அக்கறையே தவிர முணுமுணுப்பைப் பற்றி அக் கறையில்லை பணத்தை வாங்கி லாச்சியில் வைத்து விட்டு நகைக்கு மறுநாள் வரும் படி சொன்னர். வீட்டுக்குள் நகை இருந்தாலும் வேறு

திரும்பினுள் நாகம்மா. பணத்தை வாங்கிக் கொண்டு நகையைக் கொடுத்துவிட்டு. ஐஞ்சுசதத் துக்கு வழியில்லாமல் திரிஞ்சது கள், இப்ப வெளிநாட்டில் போய்க் கோப்பைகழுவிக்காசு உழைக்குதுகள். இதுவிட்ட அறுக்காமல் வேறயாரிட்ட அறுக்கிறது' என்று மனதுக் குள் நினைத்துக்கொண்டு திருப் பிய தம்பரை 'ஐயா' என்ற இன்னெரு குரல் திரும்பவைத் தது. குரல்புறுேக்கர் பொன் னையருக்குரியது என்பதைக் கண்டவுடனேயே தம்பருக்கு புளுகமாயிருந்தது. அவருக்குத் தெரியும், பொன்னையர் வந் தால் நல்ல 'கொத்தலோடு' தான் வருவார் என்று பொன் னையருக்குப்பின்னு லமெலிந்த உருவம் ஒன்று கூனிக்குறுகி நின்றது.

'ஐயா, இவற்றை வீடு வளவை வைச்சுக்கொண்டு கொஞ்சக்காசு கொடுங்கையா இவற்றை மகன் வெளிநாடு போகவேணுமாம்''

''காணிக்கும் இந்தநாளை யிலே காசு கொடுக்கருங்களே பொன்னையா. நகைக்குக் காசு எடுக்கவே சனம் ஆலாய்ப்பறக் குது''

''ஐயா மனசுவைச்சால் எல் லாம் நடக்கும்.''

''என்னட்டைக் காசில்லைப் பொன்னையா, ஆரிட்டேன் விசாரிச்சுத்தான் சொல்ல வேணும். எத்தனை பரப்பு?''

''பத்துப்பரப்பும் வீடும் இருக்கையா, லட்சத்துக்கு மேலேபெறும். இப்ப முப்பதி னுயிரம் வேணும் ஐயா இல்லை யெண்டு சொல்லாமல் உதவ வேணும், நான் சீவியகாலத் துக்கும் மறக்கமாட்டேன்''- இதுவரை பேசாதிருந்த மெலி விய உருவமும் தன் வேண்டு கோளைச் சமர்ப்பித்தது

மெலிவிய உருவத்திற்குப் பெயர் செல்லப்பர்; செல்லப் பர் பேசியவிதத்திலும் கோணி நின்ற மாதிரியிலும் எப்படி யும் தன்ரைவழிக்கு எடுக்கலா மென்ற கணக்கைத் தனக்குள் போட்டுக்கொண்ட தம்பர் மீண்டும் உஷாரானர்.

''நானெண்டா ஈட்டுக்குத் தருவன் என்னட்டைச் செப் புச்சல்லியும் இல்லை. வேறயா யாரும் எண்டால் அறுதி அல் லவோ எழுதச்சொல்லுவாங் கள்'' - தம்பர் இழுத்து இழுத் துக்கதைத்தார்

அறுதி என்ற சொல்லைக் கேட்டவுடனே செல்லப்பருக் குக் காசு எடுக்க மனம் ஏவ வில்லை. ஆனல் புறுேக்கர்விட் டால்தானே தம்பருடைய நாணயத்தைப்பற்றி ஒரு புரா ணம்பாடி, காசையும் வட்டி யையும் கட்டியவுடனே தம்பர் காணியை மறுபேச் சின்றி எழுதித்தருவார் என்று ஒரு புளுகை அவிழ்த்துவிட்டு,

**எஸ். கே. எம்.**

புறுேக்கர்காரியத்தை முடித்து விட்டார். மறுநாள் காணி எழுதப்பட்டுக் காசும் கொடுக் கப்பட்டுவிட்டது தம்பர் கமி ஷன் என்றும் முதல்மாதவட் டியென்றும் ஒரு தொகையைக் கழித்துக்கொண்டு மிகுதியைக் கொடுத்தார். புறுேக்கரும் தன்பங்கை இருபகுதியாரிட மும் வாங்கிக்கொண்டுபோய் விட்டார்.

காலம் ஓடியது செல்லப் ருடைய மகனும் வெளிநாடு போய்பணம் உழைத்து அனுப் பத்தொடங்கினன். செல்லப் பரோ மகன் அனுப்பிய காசில் முதல்வேலையாகத் தம்பர் வசம் வாங்கியபணத்தைக் கொடுப்போம் என்று யோசிக் காது மாதம் மாதம் வட்டி யைக்கட்டிக்கொண்டு, மற்றக் காசிலே பனைவியினதும் மகள தும் பேச்சைக்கேட்டு வீட் டைக்கட்டத் தொடங்கினர் தம்பருக்கென்ன? தனதுகாணி யிலே வீடுகட்டினல் பெறுமதி கூடும்தானே என்றபுளுகத்தில் வட்டியை வாங்கிக்கொண்டு பேசாதிருந்துவந்தார் வீடு எழு ம்பியது வீட்டைச்சுற்றியிருந்த கறையான் வேலி சுற்றுமதிலா கியது செல்லப்பரும் இப்ப கூலிவேலைக்கும் போவதில்லை. மகன் காசனுப்பும்போது வங்கியிலேபோய் காசெடுப் பது. காலையிலே கடற்கரைக் குப் போய் மீன்வாங்குவது. கள்ளுக்குடிப்பது - இது தான் இப்பா செல்லப்பரின்வேலை.

பத்துமாதங்களாக மகன் அனுப்பிய காசைச்சேர்த்துக் கொண்டு வீடுவளவை மீட்கும் நோக்கோடு ஒருநாள் தம்பர் வீட்டுக்குப் போனுர் செல்லப் பர் காசை எடுத்துக்கொண்டு உறுதியைக் கொண்டு சட்டத் தரணி வீட்டுக்குப்போகவரும் படி கேட்டார். செல்லப்பர் கேட்டது தான் தாமதம், சிறிவிழுந்தார் தம்பர்.

''அறுதி எழுதின காணி, நாலுவருஷமாக உங்களை அதிலே குந்தியிருக்கவிட்டது காணுதெண்டு இப்பதிருப்பி எழுதித்தரக் கேட்கிறியே. கதையைவிட்டு நல்லநாளாகப் பார்த்து வேறகாணி பார்த்துக் கொண்டு வீட்டைவிட்டு எழும்பு. ஒரு மாதத்துக்குள் எழும்பாட்டி நடக்கிறதுவேற.

(10-ம் பக்கம் பார்க்க)



# இன்னும் ஒரு திங்கள்

(குறுங்காவியம்)

புலவர் ம.பார்வதிநாதசிவம்

[2]

மணமகள் பூங்கோதையினை ஊரார் எல்லாம்
மகிழ்வுடனே ''கோதை''என அழைத்துக் கொள்வார்
பணிமொழியே சொல்லுமவள் பள்ளி தன்னில்
பயிற்றுவிக்கும் பண்பார்ந்த தொழில்மேற் கொண்டாள்
குணமேவும் அவள்மதிப்பால் அந்த ஊரே
கூடியது மணவிழவு காண என்றே
அணிசெய்தார் ஊரெல்லாம் எல்லார் நெஞ்சும்
அளப்பரிய உவகையினுல் சிறந்த தாமே

செய்கின்ற தொழிலினையே தெய்வ மாகச்
சேவிக்கும் குணமுடையாள் வறியோர்க் கெல்லாம்
பெய்கின்ற மழைபோல் வாள் தான் உழைத்த
பெரும்பகுதி மாணவர்க்கே உதவல் செய்வாள்
உய்கின்ற நன்னெறியே கற்போர்க் கென்றும்
உரைத்திடுவாள் ஆதலினுல் ஊரோர் எல்லாம்
பெய்வளையாள் வயதினையாள் எனினும் பண்பார்
பெரியார்க்குச் செயும்மதிப்பை அவருக்குச் செய்வார்

மன்றலுக்கு வந்திட்ட மணுளன் தன்னை
'ராஜன்' என அழைத்திடுவார் அவனே நீதி
மன்றேறி நீதிக்கே எதிர்பு றத்தே
நின்றேதான் வழக்காடும் சட்ட ஞானி
என்றேயும் பணம் சேர்க்கச் சட்ட ஞானம்
ஏற்றதென அவன்நினைத்தான் உழைத்தல் செய்தான்
இன்றேயும் சீதனமாய்ப் பலலட்சங்கள்
எய்துகின்ற பேற்றினனுய் இருக்கின் ருனே

மற்றோர்க்குப் பயன்படுதல் சற்றும் எண்ணுன்
மற்றோரால் பெறும்பயனே கருத்திற் கொள்வான்
உற்றோரிற் பற்றுமிலான் அதேபோ லத்தான்
உயர்நண்பர் எனமனத்தும் வைத்துக் கொள்ளான்
கற்றோரைக் கலைஞர்தமை மதித்தல் செய்யான்
கருணையெனும் வார்த்தையினை நினைத்தும் பாரான்
உற்றதொரு உறவெல்லாம் அவனுக் கிந்த
உலகத்தே பணம்ஒன்றே பணம்ஒன் றேதான்

மங்கலவாத் தியத்துடனும் வேதம் வல்ல
அந்தணர்மந் திரத்துடனும் ஆசி யோடும்
மங்கலநாண் பூங்கோதை கழுத்திற் சேர்ந்தே
''வாழ்விதுதான்'' என அவட்கே உரைத்த பின்னர்
அங்கெருவன் வாழ்த்துப்பாக் கொண்டுவந்தே
அழகுதமிழ்க் கிசைச்சுவையும் சேர்ப்பா ஞகி
மங்கலவாழ்த் துப்பாடல் பாட லானுன்
மனமுவந்து யாவருமே கேட்க லானுர்

''இல்லறமாம் பூம்பொழிலை இந்நாள் எய்தும்
இளமைபொலி வாழ்வுடையீர் நீவிர் என்றும்
எல்லையற்ற நறுமலரும் மணமும் போலும்
இனிமைமிகு தமிழ்க்கவியும் அழகும் போலும்
சொல்லுமதன் உடன்விளங்கும் பொருளும் போலும்
சுகம் ஒன்றே வந்தெய்த நீடு வாழி
நல்லறமே வழியாகச் சான்றோர் ஆசி
நாளெல்லாம் துணையாக வாழி வாழி''

''ஒருயிர்க்கா ஒருயிர்நின் றிரங்கல் வாழ்வு
ஒருயிரை ஓருயிர்காண் புரிதல் வாழ்வு
ஒருயிரால் ஓர் உயிர்நன் றெய்தல் வாழ்வென்
றுயர்ந்தோர்கள் சொல்லிடுவார் மணவாழ் வுற்ற
நீரிதனைப் புரிந்திடுவீர் ஈரு டற்கும்
நிலைத்த உயிர் ஒன்ருக என்றும் வாழ்வீர்
பாரிலுள்ளோர் பண்பான வாழ்வு தன்னைப்
பார்க்கட்டும் உம்மி''லென்றும் பாடலா ஞன்

ஆடவரும் அதிசயிக்கும் அழகு வாய்ந்தோன்
அருங்குரலிற் பாடியபின் சட்டம் இட்ட
பாடலினை மணமக்கள் கையிற் சேர்ந்தான்
பக்கத்தே நின்ருெருவர் ராஜ னுக்கு
நாடறிந்த தமிழ் அறிஞன் அயலில் வாழ்வான்
நம்மூரார் மெச்சுபல திறமை கொண்டோன்
தேடரிய குணக்குன்று துரைபேர் என்றே
செப்பினுர் ராஜனுமே வணக்கம் சொன்னுன்

வரிசையிலே மாணவர்கள் வந்து வந்து
வகைவகையாய்ப் பலப்பலவாய் மணமக் கட்கு
பரிசளித்தார் பூங்கோதை உடன்கற் பிக்கும்
பலநமங்கே வருகைதந்தே வாழ்த்துச் சொன்னுர்
அரியபல குணம்வாய்ந்த பெரியோர் எல்லாம்
ஆசியினை அவர்களுக்கு வழங்க லானுர்
பெருமிதத்திற் பூங்கோதை பெற்றோர் தாமும்
பேரன்புச் சுற்றமுமே திளைக்க லானுர்

விழவினிலே நிகழ்வதெல்லாம் பார்த்தோ ஞய
மணமகனே தன்னுள்ளே எண்ண லானுன்
அழகினிலும் பூங்கோதை வென்றுள் என்னை
அதேபோலச் செல்வாக்கால் தானும் வென்றுள்
பழகுகின்ற சுற்றத்தோர் நண்பர் கூட்டம்
பார்க்கையிலும் அவளுக்கே வெற்றி ஆகும்
உழைக்கறிஞர்த் தொழில்புரிந்தும் நானே என்றன்
மனைவியினும் செல்வாக்கிற் குறைந்தேன் என்றே.

[தொடரும்]

# இடி அமினின் அரசியல் வாழ்க்கை

★ மனித இரத்தம் சுவைப்பதில் விருப்பம்.

★ 15 ஆயிரம் காடையர்களின் தலைவன்.

★ ஆட்சி காலத்தில் ஒரு லட்சம் பேருக்குமேல் படுகொலை.

சுதந்திர உகண்டாவின் முதல் பிரதமர் என்ற பெருமையைத் தட்டிக்கொண்டவர் திரு மில்டன் ஒபட்டே (Milton Obote) அவ்வேளையில் திரு இடி அமின் உகண்டா இராணுவத்தின் உதவி 'கொமாண்டராக' இருந்தார் திரு. மில்டன் ஒபட்டேக்கும் இடி அமினுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது இடி அமினை உதவி கொமாண்டராக நியமித்தவரே ஒபட்டே தான்.

ஆறு அடி நான்கு அங்குல உயரம் கொண்ட, குத்துச் சண்டை வீரனை இடி அமினுக்கு அப்போது அவ்வளவு தூரம் அரசியலில் நாட்டமிருக்கவில்லை. பிரதமர் ஒபட்டே இடி அமினை இராணுவ உயரதிகாரியாக்கி விட்டார் இடி அமினுக்கு அப்போது இராணுவ குறியீட்டுப் பெயராக "கிசு" (Kisu) என்று வழங்கப் பட்டது.

1969 டிசம்பர் 19ம் திகதி யன்று ஒபட்டே ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ள கம்பாலா (Kamqala) மண்டபத்திற்குச் சென்றார் நன்றாக இருட்டியும் விட்டது கூட்டம் முடிந்து வெளியேறுகையில், ஒரு பெரிய கூட்டம் கைகளைத் தட்டி ஆரவாரித்த வண்ணம் வந்து கொண்டிருந்தது.

அதே சமயம் பிரதமர் 'ஒபட்டேயை நோக்கித் துப்பாக்கி வேட்டுகள் பாய்ந்தன. திடீரெனப் பிரதமர் ஒபட்டே கீழே விழுந்தார். பாதுகாவலர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். உடனடியாக வைத்திய நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஒபட்டேயின் தலையை நோக்கித் தீர்க்கப்பட்ட வேட்டுக்கள், ஓரிரு அங்குல வித்தியாசத்தில் அவரது தாடையூடாகப் பாய்ந்திருந்தன. இரு கடைவாய்ப் பற்கள் மட்டும் அகற்றப்பட்டன. மயிரிழையில் ஒபட்டே உயிர் தப்பினார்.

## அமின் மீது சந்தேகம்

இந்த நிலையில் ஒபட்டேயைச் சுட்டவர்கள் யார் என்று தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சி எங்கும் நடைபெற்ற வண்ணம் இருந்தது. அதே நேரம் இரகசியப் பொலிசாரின் சந்தேகம் இடி அமின் பக்கம் திரும்பியது. ஏனெனில் அன்றைய அந்தக் கூட்டத்தில் இடி அமின் கலந்து கொள்ளாதது பெரும் கேள்விக்குறியாக இருந்தது.

இரகசியப் பிரிவினர் இடி அமினின் வசிப்பிடத்திற்கு விரைந்தார்கள். அங்கு அவர் இருக்கவில்லை. அவர் பொம்போ (Bombo) போய் விட்டதாகத் தகவல் கிடைத்தது.

இரகசியமான முறையில் விசாரணைகள் தொடர்ந்து நடந்த வண்ணம் இருந்தன. அப்போதே வேறும் ஒரு சம்பவம் இடம் பெற்றது. 1670 ஜனவரி 25ம் திகதி 'பிரிகேடியர்' பிரினோ ஒக்கோயா (Pierino Okoya) அவரது மனைவியும் அவர்களது வீட்டினருகிலேயே சுட்டுக் கொல்லப் பட்டார்கள். இவ் விஷயமாகவும் இடி அமின் சந்தேகிக்கப் பட்டார்.

இடி அமினின் சகபாடிகள் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போதெல்லாம் இடி அமின், விசாரணைக்கு உட்படுத்தப் படுவோரை கட்டாய லீவில் அனுப்பியும், இடமாற்றம் செய்தும் வந்தார். 1970ம் ஆண்டு ஜூன் மாதம் 'சில்வர் ஸ்பிரிங் ஒட்டலுக்கு' ஒபட்டே விருந்துபசாரமொன்றுக்குச் சென்று கொண்டிருந்தார். அன்றும் இரண்டாவது தடவையாக அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது தெய்வாதீனமாக ஒபட்டே அதிலும் தப்பிக் கொண்டார்.

ஒபட்டே மனதில் என்ன நினைத்திருந்தாரோ தெரியாது ஆனால் வெளிப்படையாக இடி அமினைக் கைது செய்யப் போவதாக அவர் காட்டிக் கொள்ளவில்லை.

இதற்கிடையில் இடி அமின் தனது செயல்களில் முந்திக் கொண்டார். அவருக்கு சூழ்நிலையும் சாதகமாக அமைந்து விட்டது

ஒபட்டே 1971ம் ஆண்டு ஜனவரி 5ம் திகதி பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சிங்கப்பூருக்குச் சென்றுவிட்டார். இவ் வேளை இடி அமின் தமது முக்கிய இராணுவ அதிகாரிகளுடன் கூட்டங்கள் கூடுவதும் அவர்களுக்கு பணிப்புரைகள் வழங்கு வதுமாக இருந்து தமது நிலையைப் பலப்படுத்திக் கொண்டார். அதே நேரம் திடீரென இடி அமினின் சகபாடிகள் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஒபட்டே சிங்கப்பூரிலிருந்து விமான மூலம் உகண்டா திரும்பிக் கொண்டிருந்தார்; அவ் வேளை உகண்டா அரசை இராணுவம் கைப்பற்றிக்கொண்டது என்ற தகவலை பி.பி.சி ஒலிபரப்பியதாக விமானத்தில் வைத்தே ஒபட்டேக்கு அறிவிக்கப் பட்டது.

1971 ஜனவரியிலிருந்து உகண்டாவின் ஆட்சியைக் கைப்பற்றிய இடி அமின் மக்கள் மத்தியில் பெரும் வீரனாகத் திகழ்ந்தார். கொண்டாட்டங்கள் மூன்று நான்கு வாரங்கள் நீடித்தன. அதே வேளை, ஒபட்டேயின் ஆட்சியில் தடுப்புக் காவலில் வைத்திருந்த அனைவரையும் விடுதலையும் செய்தார்.

இடி அமினின் அமைச்சரவையில் மிக அனுபவசாலிகளும், கெட்டித்தன மானவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஒவ்வொரு அமைச்சருக்கும் ஒவ்வொரு 'பென்ஸ் கார்' வழங்கப்பட்டது. அக் கார்களில் 'இராணுவ அரசாங்கம்' என்ற அடையாளமும் பொறிக்கப்பட்டது.

'ஐந்து வருடங்களுக்கு இராணுவம் ஆட்சியிலிருக்கும் என்று பெப்ரவரி 22-ல் இடி அமின் வானொலி மூலம் ஒரு அறிக்கையை விடுத்தார்

அவரது ஆட்சி தொடங்கி ஒரு மாதத்துக்குள் 36 இராணுவ அதிகாரிகளும் ஒரு இராணுவ கோப்ரலும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

மக்கின்ட் பிரிசன் (Makindye Prision) என்று அழைக்கப் படும் ஒரு கைதிகள் பிரிவிலுள்ள 'சிங்கப்பூர்க்கூடம்' என்ற அறையிலேயே இச் சம்பவம் இடம் பெற்றது. அந்த அறையில் மட்டும் இரத்தம் ஒரு அங்குல உயரத்திற்கு உறைந்திருந்தது. அந்த அறையைத் துப்பரவு செய்ய மட்டும் 6 மணித்தியாலயங்கள் பிடித்ததாம்.

குற்றவாளிகள் என்று கருதப்படுபவர்கள் 'சுட்டுக் கொல்லப்படுவார்கள்' என்று, இடி அமின் அறிவித்திருந்தார். அதன்பின்னர் நடந்த சம்பவம் ஒன்றில் 32 அசோலி உத்தியோகத்தர்களை ஒரு அறையில் இட்டு, குண்டொன்றை வெடிக்கப் பண்ணிக் கொலை செய்யப்பட்டு அவர்களது உடல்பாகங்கள் நைல்நதிக்குள் தூக்கி வீசப்பட்டன கொலை ஞர்க்கு உகண்டாவில் பஞ்சமிருக்கவில்லை.

1972-ம் ஆண்டு ஆகஸ்ட் 4-ம் திகதி இடிஅமின், தான் ஒரு விசித்திரமான கனவு கண்டதாகவும், அதன்படி 90 நாட்களில் உகண்டாவிலுள்ள ஐம்பதாயிரம் ஆசிய நாட்டவரும் வெளியேறிவிட வேண்டும் என்றும் கூறினார் இதே வேளை உகண்டா நாட்டில் ஆசிய நாட்டவரான வைத்தியர்கள் கணக்காளர்கள் வியாபாரிகள் போன்றோர் தொழில் புரிந்து வந்தார்கள் அவர்களது வங்கிக் கணக்குகளும் நிறுத்தப்பட்டது அத்தோடு ஆசிய நாட்டவர்களின் சொத்துக்களும் இடிஅமினின் இராணுவ வீரர்களால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டன.

இதைத் தொடர்ந்து ஆசிரியர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

ஒருநாள் ஒபட்டேயின் கெரில்லா வீரர்கள் தன்சானியா எல்லைக்கு அண்மையாக முடுகுலா (Mutukula) என்ற இடத்தில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். அதன்போது உகண்டா வீரர்



களால் ஒபட்டேயின் கெரில்லா வீரர்கள் விரட்டியடிக்கப்பட்ட போதும் கூட, ஒபட்டேயின் வீரர்கள் நாட்டைக் கைப்பற்றி விட்டார்கள் என்று ஒரு பொய்த்தகவலை வெளியிட்டார்.

1973ல் உகண்டாவின் வெளிநாட்டு அமைச்சராக இருந்த 'வெனும் கிபேடி' (Wanume Kibedi) உகண்டாவில் இறந்தவர்கள் பற்றிய கணக்கெடுப்பொன்றை மேற்கொண்டபோது சுமார் 90 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்றதோடு அவர்களின் உடல் காடுகளிலும் புதர்களிலும் மறைக்கப்பட்டன என்றும் கூறியுள்ளார். அத்தோடு நாளொன்றுக்கு 20 பேர் வீதம் கொல்லப்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### கோப்பாய் பிரபா

1977ல் இடிஅமின் தனது மந்திரி சபையிலுள்ள அமைச்சர்களில் பெரும்பான்மையினரை ஒரு மாதக் கட்டாய லீவில் அனுப்பினார். அதன் பின்பு சில வாரங்களில் அந்த ஒரு மாத லீவையும் இருமாதங்களாக நீடித்தார். இறுதியாக அவரது மந்திரி சபையில் மூத்த உறுப்பினர்கள் எவருமே இருக்கவில்லை. அதே வேளை உகண்டாவின் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்தது. உகண்டாவில் இருந்த வைத்திய நிபுணர்கள், வழக்

(8-ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் உங்கள் பலன்

மாதம் ஆவணி
திகதி 23 (1985-9-08)
ஞாயிறுக்கிழமை
திதி நவமி பின் இரவு
நக்ஷத்திரம்; மிருகசீரிடம் முன்னிரவுவரை

### மேடம்

பெரியோர் புகழ்ச்சியும் பொருளும் கிட்டும். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கிடமுண்டு நீண்டநாள் செய்தி இன்று கிட்டும் கைத்தொழில் புரிவோருக்கு நல்லவருவாய்க்கு இடமுண்டு தீயசக்திகளும் உங்களைப் பல வழிகளில் வீழ்த்தப்பார்க்கும். பொறுமை வேண்டும்.

### இடபம்

எண்ணிய காரியத்தில் தடைகள் பல உருவாகும். மேலதிகாரிகளின் கண்டிப்புக்கும் ஆளாவீர்கள். குடும்பப் பிணைப்புகளும் இறுகும். காதலர்களுக்கு சுரும்பாக இருக்கும். வஞ்சகர்களும் வலைவிரிப்பர். தருமசிந்தையும் மேலோங்கும்; பிள்ளைகளாலும் உதவியுண்டு, புகழ்ச்சியும் மகிழ்ச்சியைத் தேடித்தரும்.

### மிதுனம்

தனவரவு உங்களை மகிழ்விக்கும். பந்தபாசம் உங்களை மகிழ்விக்கும். பகை மூட்டம் தோன்றும். பதட்டமும் உடன் சேரும். குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சிதரும்.

### கடகம்

குடும்பத்தில் சிறுபூசலின்பின் குதூகலம் தோன்றும். ஆயுத பீடைக்கும். எதிரிகளின் சச்சரவிற்கிடமுண்டு. உங்கள் நிலை தடுமாற வைக்கும், மாணவர்களாயின் நிதானம் அவசியம். உடல்நலமும் பாதிக்கப்படலாம்.

### சிங்கம்

தாய்வழிப் பெருமையும் அவ்வழி ஆதரவுமுண்டாம். உயர்கல்வியிலும் முன்னேற்றம் காணப்படும். சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும். சுகாதாரம் வேண்டும். நீண்ட நாள் பிணி நீக்க இடமுண்டு. அவசரப் போக்கையும் ஆத்திர உணர்ச்சியையும் தவிர்க்கவும்.

### கன்னி

புதிய பாதை திறக்கும். புத்திர மகிழ்ச்சி பிறக்கும். பந்துக்களின் ஆதரவும் கிடைக்கும். இன்பத்தின் ரேகை படரும். இல்லத்திலும் மகிழ்ச்சி யுண்டு. சிலருக்கு உஷ்ண ரோகமும் தென்படலாம்.

### துலாம்

தூரத்துப்பயணம் ஒன்று கவலையைத்தரலாம். வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். வைத்தியச் செலவுக்கும் இடமுண்டு. உறவாடிக் கெடுப்பதற்கும் பகையாளிகள் வருவர் முதலீடுகளைத் தவிர்க்கவும் குடும்பத்திலும் குறை கேட்க நேரிடும்.

### விருச்சிகம்

மகிழ்ச்சி தேடிவரும். களஸ்திரவழியாலும் நன்மை பிறக்கும் பிறர் ஒத்துழைப்பும் கிட்டும். சமயோசித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். காதலர்கள் வாழ்விலும் வரவிலும் தெம்புண்டு. பேச்சாளர் மத்தியிலும் புகழ்பரவும்.

### தனுசு

சிறுவிபத்தும் ஏற்படாம் நிதானத்துடன் செயல்படவும் உடல்நலம் பாதிக்கப் படலாம். பெண்கள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளவும். கடன் தொல்லைகளும் அதிகரிக்கும் குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையலாம்;

### மகரம்

பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகிட்டலாம். நீண்டநாள் மனக்குறை நிவர்த்தியாகலாம் பொதுப் பணிகளில் ஈடுபடுவீர்கள். பொதுமக்கள் ஆதரவும் கிடைக்கும். புண்ணிய யாத்திரையும் செல்ல நேரிடலாம்.

### கும்பம்

வெற்றிப் பாதையில் வீறு நடைபோடுவீர்கள். தொழிற்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். திடீரென வரும் வருவாயால் கடன் தொல்லை நீங்கலாம். மாணவர்கள் சிந்தித்துச் செயல்படவும்

### மீனம்

சகோதர வழிச் சந்தோஷத்திற்கும் இடமேற்படலாம் பெரியோர் ஆதரவும் தக்க சமயத்தில் கிட்டும். ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்வீர்கள். கல்வித்துறையிலும் மகிழ்ச்சி தென்படும். தனவரவிற்கும் இடமுண்டு.

திருமலை
க.வே.ரவீந்திரன்

## காற்றைக் கேட்டுப் பார்த்தேன்..?

''உலகமே கவிதை மயமாம்
ஒவ்வொரு ஒலி அலையும்
காற்றில் நனையும் போது
கவிதை பிறக்கிறதாம்!''
இலங்கையில் இருந்து
வீசும் காற்றைக்
கேட்டுப்பார்த்தேன்
"...? ...? ...?"

கவிஞர் நா. காமராசன்

## நின்னடியார் கூட்டமெல்லாம் நீள்தூரம் சென்றனவோ?

காவடி தோளில் கொண்டு கடுகிநடை போட்டு வந்து
சேவடிகள் போற்றிநின்ற சீரடியார் கூட்டமெங்கே?
பறவைக்கா வடிகளிலே பறந்து பறந்துவந்து
இறைவா தொழுதுநின்ற மெய்யடியார் கூட்டமெங்கே?

ஊர்கள் பலவற்றை உடலால் உருண்டு வந்து
நேர்த்திக் கடன்கள் செய்த நின்னடியார் கூட்டமெங்கே?
பண்ணின் இசையோடு பல்தூரம் பாடிவந்த
எண்ணுக் கணக்கில்லா இன்னடியார் கூட்டமெங்கே?

பாற்செம்பு தலைபிக்கொண்டு பையவே நடந்து வந்து
பாற்சோலை முழுக்கீந்த பாவையர்கள் கூட்டமெங்கே?
கற்பூரச் சட்டியேந்தி கனல்தனை தலையிலேந்தி
பொற்பாதம் வேண்டிநின்ற பூவையர்கள் கூட்டமெங்கே?

என்னிதயம் வேதனை எவர்க்கையா சொல்லிடுவேன்?
என்னுயிராய் எங்காமாய் இருப்போய்க்கே உரைக்கின்றேன்!

பன்னிரண்டு கையிருந்தும் பாதுகாக்க ஏலாமல்
நின்னடியார் கூட்டமெல்லாம் நீள்தூரம் சென்றனவோ?

— க. ந. கங்கைவேணியன்

# குறுநாவல்

இரும்பையே உருக்குமாப் போல் வெளியே வெய்யில் தகித்துக்கொண்டிருந்தது. காற்றுப்பட்டபோது அனல் வெக்கையைப் போன்று உடம்பு கொதித்தது. சங்கருக்கு நினைக்கவே பயமாகஇருந்தது. இரண்டு வருடங்களை இந்தப் பாலைவனத்தில் எப்படிக் கழிக்கப் போகிறோம் என்று பயந்தான். இந்த வெக்கையை விட விஸ்வமடுக்குளக் கமத்தில் வெக்கை பரவாயில்லையே என்று நினைத்தான்.

அந்தோனி பொலிகண்டியில் கரவலை போட்டும் வள்ளத்தில் சென்றும் மீன்பிடிப்பவன்-அவன் ஒரு கடல்மீன். வெய்யில் குடித்துக் கறுத்துப் போன அவனது கரிய மேனிக்குக் குவைத் வெய்யில் அதிகம் உறைத்ததாகத் தெரியவில்லை. அவர்களை வேலைக்கு அழைத்த கொம்பனியில் இருந்து ஒரு பச்சை வானும் இன்னொரு பஸ் வண்டியும் வந்திருந்தன. இரண்டு வாகனங்களையும் அராபியர்களே ஓட்டினார்கள். கொம்பனியின் நிர்வாகச் செயலாளர் வந்திருந்தார். அவரோடு இரண்டு ஜேர்மனியர்களும் ஒரு இந்தியரும் வந்திருந்தனர். இந்தியர் உருதுக்காரர். நன்றாக ஆங்கிலம் பேசினார். ஜேர்மனியர்களும் நன்றாக ஆங்கிலம் கதைத்தார்கள். நிர்வாகச் செயலாளர் சங்கருடைய பாஸ்போட்டையும் அவனோடு வந்திருந்த மற்ற இலங்கை வாலிபர்களுடைய பாஸ்போட்டுகளையும் வாங்கிக்கொண்டார். இனிமேல் அவர்கள் விடுமுறையில் திரும்பிச் செல்லும்போதுதான் பாஸ்போட்டுக்களைத் திருப்பிக் கொடுப்பார்களாம். அதுவரைக்கும் கொம்பனிச் சட்ட திட்டங்களுக்கு அமைந்து நடக்கவேண்டும். தகராறு செய்தால் பொலிசாரின் உதவியுடன் திரும்பவும் இலங்கைக்கே அனுப்பிவிடுவார்கள். பாரதூரமான குற்றங்களென்றால் குவைத்தில் சிறையும் வைத்துவிடுவார்கள்;

அபுஹலிபா என்ற இடத்தில் காம்ப் கட்டியிருந்தார்கள். சுமார் இருநூறு தொழிலாளர்களை அங்கு குடியமர்த்தினார்கள். கீழேயும் மேல்மாடியிலுமாக சுமார் இருபத்தைந்து அறைகள் இருக்கும். ஒவ்வொரு அறைக்குள்ளும் ஆறு பேர் வீதம் தங்கவைத்தார்கள். கீழேயும் மேலேயுமாகப் பொருத்தப்பட்ட இரட்டை ஸ்பிரிங் கட்டில்கள். டியெஸ்ரா மெத்தைகள். தலையணை, பெட்சீட், ரவல், சோப், சவரஞ்செய்யும் ரைட் பவுடர் எல்லாம் கொடுத்தார்கள். ஒவ்வொரு அறைக்கும் தனித்தனி ஏயர்கண்டிஷன் பொருத்தப்பட்டிருந்தது. வெளியே பிரயாணம் செய்து வெக்கையில் வாடிப்போன சங்கருக்குக் குளு குளு வென்ற ஏயர் கண்டிஷன் றூம் இதமாக இருந்தது. வெளிநாட்டுக் கொம்பனிகளைப் பற்றித் தான் கேள்விப்பட்டவற்றை மனத்தில் வைத்துப் பயந்த காரணத்தால் வீட்டில் இருந்து தலையணையும் பெட்சீட்டும் கொண்டு வந்த சங்கருக்கு இங்கு கொம்பனியில் வழங்கப்பட்ட வரவேற்பு மிகவும் வியப்பாக இருந்தது. நாளடைவில் எல்லாக் கொம்பனிகளிலும் இப்படி இல்லை என்பதைத் தெரிந்து கொண்டான்.

''இப்பிடி ஏயர்கொண்டிஷன் றூமையும் மெத்தையையும் உன்ரை வாழ்க்கையிலை கண்டிருப்பியடா' என்று அந்தோனி அடிக்கடி கேட்டுக் கொள்வான்.

காம்ப்பில் கீழே டைனிங் ஹோலும், ரீ. வி. றூமும், பாத்றூம்களும் கட்டப்பட்டிருந்தன. மாடியிலும் பாத்றூம்கள் இருந்தன மலகூடமும் பாத்றூமும் ஒன்றாகவே கட்டியிருந்தார்கள். சங்கர் அலுப்புத்தீரக் குளிப்பதற்காகச் சென்றான். தண்ணீரின் சூடு தாங்க முடியவில்லை. மேல தகர டாங்கிகளில் சேகரித்த தண்ணீர் வெய்யில் சூட்டில் சூடேறித்தான் இப்படிக் கொதித்தது. அநேகமானவர்கள் இரவில் குளிப்பை வைத்துக் கொண்டார்கள். சிலர் பெரிய வாளிகளில் தண்ணீரை நிரப்பி விட்டுச் சூடு ஆறியபிறகு குளித்தார்கள்.

மறுநாளே வேலைத்தலத்திற்குக் கூட்டிச்சென்றார்கள். வெளிநாடுகளில் இருந்து தான் சீமெந்தைக் கப்பல் கப்பலாக வாங்கி அதைப் பைக்கற்றுகளில் அடைத்து ஈராக்கிற்கு விற்பனை செய்வதுதான் அந்தக் கம்பனியின் முக்கிய வியாபாரமாக இருந்தது. ஈரான்-ஈராக் யுத்தத்தினால் ஈராக்கின் இடிந்துபோன கட்டிடங்களைச் சீர்படுத்தவும் புதிய வீதிகளை அமைக்கவும் அதிகமான சீமெந்து தேவைப்பட்டது. இதன் பெரும் பகுதியை வழங்கும் குத்தகை ஒப்பந்தம் சங்கர் தொழிலாளியாக வேலை செய்த அக் கம்பனிக்குக் கிடைத்திருந்தது. அந்தோனி கப்பற்தள உதவியாளாகச் [டெக் ஹாண்ட்] சேர்ந்திருந்தான். சங்கருக்கு எண்பது அமெரிக்க டாலர்களும் அந்தோனிக்கு நூறு அமெரிக்க டாலர்களும் சம்பளமாகக் கிடைத்தன. சங்கர் இரவு பகலாக ஓவர்ரைம் செய்து சுமார் நூற்றைம்பது டாலர்களை [ஒரு டாலர்—இருபத்தாறு ரூபாய் மட்டில் உழைத்தான். சில மாதங்களில் ஓவர்ரைம் கிடைக்காது.

குவைத்தின் முக்கிய துறைமுகங்களில் ஒன்றான சுஹைபா துறைமுகத்திலேயே சங்கரும் நண்பர்களும் வேலை செய்ய வேண்டிய தொழிற்சாலை மிதந்து கொண்டிருந்தது ஆம். அது ஒரு கப்பல். ஆங்கிலத்தில 'பாஜ்' என்று சொல்வார்கள். சுமார் நூற்றைம்பது அடி நீளமும் நாற்பத்தைந்தடி அகலமும் கொண்ட அக் கப்பலில் என்ஜின் றூம், ஸ்ரோர்ஸ் றூம், மனேஜரின் ஒவ்வீஸ் [பாஜ் கப்டனை மனேஜர் என்பார்கள்]. றேடியோ றூமும் கப்டனின் ஒவ்விசும், பைக்கற் செய்யும் மெஷின்கள் உள்ள பகுதி. தொழிலாளர் கன்டீன், ஒவ்விசர்களின் மெஸ் என்று பல பகுதிகள்இருந்தன. சீமெந்துத் தூளை இருப்பில் வைக்கும் நான்கு பெரிய கிடங்குகள் [ஹச் என்பார்கள்] இருந்தன. இக் கிடங்குகளுக்குள் சீமெந்தை ஹைட்ரோலிக் பவரினால் தானே திறந்து மூடும் இரும்பு வாளிகளைத் தூக்கியும் அங்கும் இங்கும் ஆட்டியும் வேலை செய்யும் நான்கு விஞ்சுகளும் (கப்பிகள்) இருந்தன. இந்தக் கப்பிகளை இயக்குவதற்காக இலங்கையில் துறைமுகங்களில் வேலைசெய்த பதினான்கு விஞ்ச் ஒப்பரேட்டர்களும் வந்திருந்தார்கள். இவர்கள் ஏற்கனவே ஈராக்கில் வேலைசெய்தவர்கள். இவர்களுக்கு முந்நூறு டொலர் தொடக்கம் முந்நூற்று முப்பது வரை சம்பளமாக வழங்கப்பட்டது.

சங்கர் அங்கு சேர்ந்த சில தினங்களுக்குள்ளேயே பல விஷயங்களை அறிந்து கொண்டான். ஆங்கிலம் நன்கு பேசத் தெரிந்ததால் வெள்ளைக்கார மனேஜரின் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டு விரைவில் அவருடைய 'மெஸ்போய்'ஆக மாறி விட்டான், மனேஜரின் கிளார்க் ஆக ஒரு யாழ்ப்பாணத் தமிழரே வந்திருந்தார். இவர் அரசாங்க திணைக்களம் ஒன்றில் இருந்து இரண்டு வருடங்கள் சம்பளமற்ற விடுமுறை எடுத்துக்கொண்டு வந்திருந்தார், ஆங்கிலத்தில் கடிதங்களை ரைப் செய்வதும் மனேஜருக்கு உதவியாக எழுத்து வேலைகளைக் கவனிப்பதும் தொழிலாளர்களின் ஓவர் ரைம்வேலைகளைப் பதிந்து கணக்காளருக்கு அனுப்புவதும் வயர்லசில் கதைத்துத் தகவல்களைச்சேகரிப்பதும் கொடுப்பதும் இவரது கடமைகளா

[3]

இருந்தன. சங்கரின் பொறுப்புணர்வும் குடும்பக் கஷ்டங்களும் அமைதியான நடவடிக்கைகளும் கிளாக்கரை மிகவும் கவர்ந்திருந்தன. இருவரும் நேரம் கிடைக்கும்போது தமது சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்வார்கள், கிளாக்கருக்கு நூறுடொலர்களே வழங்கப்பட்டது. ஓவர்ரைமுடன் சேர்த்து இவர் சராசரி நூற்றைம்பது அல்லது நூற்றெழுபது டொலர்களை உழைத்தார். சாப்பாடு, தங்குமிட வசதிகளைக் கொம்பனியே கவனித்துக் கொண்டதால் பரவாயில்லாமல் இருந்தது. இலங்கை எஞ்சினியர்களும், வெள்ளைக்கார எஞ்சினியர்களும், கிரேக்க கப்டன் ஒருவரும் அக் கப்பலில் வேலை செய்தனர். இலங்கை எஞ்சினியர்கள் அன்பாக வேலைவாங்குவார்கள். ஒரு சிலர் தொழிலாளர்களுடன் கண்டிப்பாக நடந்துகொண்டாலும் அவர்களுடைய சுகதுக்கங்களில் மிகவும் அக்கறையோடு கலந்து கொள்வார்கள். முதலாளி லெபனானைச் சேர்ந்த அராபியராக இருந்தபடியால் இலங்கைத் தொழிலாளர்களைக் கொண்டு வேலை வாங்குவதற்காக வெள்ளைக்காரர்களை எஞ்சினியர்களாக வைத்து நல்ல சம்பளம் கொடுத்தார். ஒரு தடித்த எஞ்சினியர் மட்டும் சற்றுக் கொடூரமாக நடந்து கொண்டார். தொழிலாளர்களுடன் கண்டபடி ஏசியும் அதட்டியும், வெருட்டியும் நடந்துகொள்வார். சங்கருக்கு இவரைக் கண்டாலே பயந்தான்வரும் எத்தனை தடவை 'ரீ' ஊற்றிக்கொடுத்தாலும் ஏதாவது ஒருகுறை கண்டு பிடிப்பார். வெயிலில் களைத்து வேலை செய்துவிட்டு வரும் தொழிலாளிகள் சற்று ஆறுதலாகக் கன்ரீனில் இருந்து தேநீர் குடிப்பதைக் கண்டால் அவருக்குப் பொறுக்காது. உடனே 'வட் ஆர் யூ டூயிங்......' என்று கேட்டுக் கொண்டே மேய்ப்பவர்போல வந்துநிற்பார். தேநீர் கலந்த பாத்திரத்தை அப்படியே கடலினுள் தூக்கிக் கொட்டிய சந்தர்ப்பங்களும் உண்டு.

நாடுகளை அடக்கியாண்ட ஆங்கில ஆட்சியாளர்களின் பிரதிநிதிகளின் எச்ச சொச்சங்களில் ஒன்றாகவே இந்தப் பருத்த வெள்ளைக்காரரைப் பற்றிச் சங்கர் நினைத்தான். அந்தோனி அவரை வேண்டுமென்றே தமிழில் தூஷணத்தால் பேசுவான். அவருக்குத் தமிழ் தெரியாததால் தப்பித்தான. இல்லாவிட்டால் அன்றைக்கே மனேஜரிடம் றிப்போட் பண்ணி ரிக்கற்றை வாங்கிக் கொடுத்திருப்பான்.

குவைத்துக்கு வந்து இரண்டு வாரங்களாக பாகில் நகரத்தில் உள்ள இந்திய, கேரள முதலாளிகளின் உணவுக் கடைகளிலேயே உணவுக்குக் கூட்டிச் சென்றார்கள். சாப்பிட ஆரம்பிக்க முதலேயே கிரஷ் குடிப்பார்கள். பிறகு சப்பாத்தி, முட்டை, கோழி இறைச்சி என்று நன்றாகக் கேட்டுச் சாப்பிடுவார்கள். இப்போதைய விலைவாசியில் ஊரில் கடைகளில் இப்படிச் சாப்பிடுவதென்றால் ஒரு ஆளுக்கு வேளைக்கு நூற்றைம்பது ரூபாய் முடியும். நாளடைவில் பாகிலில் உள்ள கேரளத்து முதலாளியே காம்ப்பில் உள்ள கன்டீனை நடத்தும்படி குத்தகை கொடுத்துவிட்டார்கள். இதனால் மத்தியானத்தில் சோறும், இரவில் சப்பாத்தி அல்லது பாணும் வெள்ளிக்கிழமைகளில் காலையில் தோசையும் கிடைத்தன. தொடர்ந்து ஒரே வகையான சாப்பாடுகளைச் சாப்பிட்டதால் சங்கருக்கு நாக்குச் சப்புக் கொட்டியது. லீவுநாளான வெள்ளிக்கிழமைகளில் பாகலுக்குப் போய் அந்தோனி இறால், மீன், நண்டு என்று வாங்கிவருவான் தங்களுடைய அறைக்குள்ளேயே ஹீட்டரைப் பொருத்தி அதில் ஏதாவது சிறு பாத்திரங்களை வைத்துச் சமைப்பார்கள் வெங்காயம், மிளகாய், பட்டர், ஒலிவ்எண்ணெய் என்பவற்றை கேரளத்து அண்ணாச்சியிடமே கேட்டுவாங்கிக் கொள்வார்கள். அண்ணாச்சி தமிழ்ப் பொடியளுடன் மிகவும் அனுதாபத்துடன் நடந்து கொள்வார். சங்கரும் அந்தோனியும் சாதி, மத, மொழி வேறுபாடின்றி எல்லோருடனும் அன்பாகவே பழகிவந்தார்கள். சங்கர் எட்டாம் வகுப்புவரை சிங்களம் படித்திருந்தான். உத்தியோகங்களுக்கு விண்ணப்பிப்பதற்காக முன்பு படித்ததால் இப்போது காம்ப்பில் உள்ள சிங்கள நண்பர்களுடன் சேர்ந்து மெல்ல மெல்லச் சிங்களம் பேசவும் கற்றுக் கொண்டான். கொம்பனியின் றைவராக இருக்கும் சில்வா நீண்டகாலமாக அங்கு வேலை செய்வதால் ரி. வி. வீடியோ டெக் எல்லாம் எடுத்து வைத்திருந்தான். பக்கத்து அறை என்பதால் சங்கர் அங்கு அடிக்கடி படம் பார்க்கப்போவதும் கதைப்பதும் வழக்கமாக இருந்தது. [தொடரும்]




## மனிதன்

மனிதன் ஒருவன் தான் சிரிக்கும் தகுதி பெற்றவன் என்று கூறுகிறார்கள். அதே நேரத்தில் பிறர் பார்த்துச் சிரிக்கக் கூடிய நிலையுள்ளவனும் அவன் தான்.

— கிரிவலே


# பெற்று எசன்ஸ் சப்ளையேர்ஸ்

## (Pettah Essence Suppliers)

* பேக்கரி தயாரிப்புகள்
* பிஸ்கற், ரொபி, இனிப்பு
* குளிர்பானம், ஐஸ்கிரீம்

சிற்றுண்டி வகைகளுக்கான

சகலவிதமான எசன்ஸ். கலர்பவுடர், கேக் தயாரிப்புக்கு தேவையான சகல பொருட்களுக்கும்

ஊதுபத்தி - சாம்பிராணி - விளைவு சூடம் - ரலகம்பவுடர் - வாசனைத் திரவிய எண்ணை ஓடிக்கொலோன் - ஆகியவை தயாரிப்பதற்கான

உற்பத்திப் பொருட்களுக்கும் ஏனைய இதர

பேப்பர்வகை, பொக்ஸ்போட், காட்போட், ஆற்போட், நியூஸ்பேப்பர், ஒயில்பேப்பர், பிரவுண்பேப்பர், ரிசுபேப்பர், சலபின், எல்லாவகையான பொலித்தீன் வகைகளுக்கும்-

## இன்றே விஜயம் செய்யுங்கள்

223, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(Power House Road JAFFNA)

## இராசராசசோழப்பேரரசன் — 10

# இராசராசனின் ஆளுமை [2]

**க. சி. குலரத்தினம்**

இராசராசனின் பெருமையை அறிந்தவர்களுள் கருவூர்த்தேவர், ஈசானசிவாசாரியர், சர்வசிவ பண்டிதர், நம்பியாண்டார் நம்பிகள், தில்லைவாழந்தணர்கள் முதலானவர்களை முதலிலே சொல்ல வேண்டும். பின்னர் அவன் பாட்டியாரான செம்பியன் மாதேவியார், தமைக்கையாராய குந்தவைப்பிராட்டியார் முதலானோரையும், அவனுடைய அரசஉத்தியோகத்தர்கள், சேனைபதிகள், பன்முகப் படைத்தலைவர்கள், ஆட்பட்ட பகைஅரசர்களைச் சொல்ல வேண்டும். பின்னர் அவன் காலத்தும் அவன் பின்னரும் வந்த பக்கலைப்புலவர்களைக் கூறவேண்டும் யார் யார் எவ்வெத்துறைகளில் விஞ்சினர்களோ அவரவர்களை வம்மின் என வரவழைத்து அவ்வக்கலைகளை வளர்க்குமாறு பேராதரவும் ஊக்கமும் அளித்த பெருநோக்கினன் பெரும் புரவலனுய இராசராசன்.

### புலவர் புகழ்

சைவப்பெரும் புலவர்களான சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர் முதலானோர் அவன் காலத்தை அடுத்து வாழ்ந்தவர்களாயினும், அவனுடைய பேராற்றலையும் பெரும்பணிகளையும் வியந்து, ''சைவம் வளர்க்கும் தண்முகில் திருமுறைபோற்றும் செவிவி, கற்றவர் தமக்கொரு நற்றுணை, இயலிசையடரும் கொழு கொம்பு'' என்றெல்லாம் புகழ்ந்து போற்றியுள்ளார்.

இராசராசன் சிவபக்தியும் சைவப்பற்றும், தமிழ்ப்பற்றும் மிகுந்தவனாயினும், பிறர்சமயவுரிமைகளைப் பேணிப்பாதுகாப்பதற்குத் தன்னாலான வரை முன்னின்றுதவி புரிந்து செங்கோல் செலுத்தியவன்: அவன் பிறநாட்டினனும் புறச்சமயத்தினனுமாகிய பர்மா நாட்டுப் புத்தசமயத்தைச் சேர்ந்த சூளாமணி வர்மன் என்பான் விடுத்தவேண்டுகோள் விண்ணப்பத்துக்கிணங்கத் தன்நாட்டில் தாராள மனப்பான்மையோடு செய்து கொடுத்த பேருதவிபெரியது; வரலாறுகண்ட அதிசயமான வைபவம். இது தமிழரசர் வரலாற்றில் ஒளிவீசும் பண்பாட்டு அத்தியாயமாயுள்ள பகுதி.

பேராற்றலும் பெருந்திருவும் பேரறிவும் பெருந்தன்மையும் வாய்ந்த பேரரசன் இராசராசன் தனது ஆட்சியின் இருபதிதோராம் ஆண்டின் தொண்ணூற்றிரண்டாம் நாளில் தஞ்சை மாநகரில் தனிக்குளம் என்னும் பழைய திருக்கோயிலிருந்த இடத்தில் தஞ்சைப் பெருங்கோயிலாம் பிரகதீஸ்வரர் ஆலயம் என்னும் இராசராசேசுவரத்தைக் கட்டுவித்த காலத்தில், திருக்கோயிற்பணிகளைக் கண்காணிப்பதற்காக அங்கே புறம்பாடி மாளிகையில், இராசாசிரயன் என்னும் திருவோலக்க மண்டபத்தில் வீற்றிருந்தபோது, புத்தசமய சாதுக்கள் அங்கே புகுந்து மன்னனை மகிழ்ச்சிததும்ப மனமாரவாழ்த்தினார்கள்.

### இராசராசன் உதவி

பர்மாநாட்டு மன்னன்பாரத நாட்டுப் புத்தசமயத்தவர்களின் நன்மைகருதி நாகபட்டினத்திலேபுத்தசயித்தியங்கட்டுவதற்கு இராசராசனின் உதவியையும், அனுமதியையும் கோரிவிண்ணப்பித்த சாதுக்களை வரவேற்றுபசரித்த மன்னன் செய்தளித்த உபகரிப்பும் பெரிதாகும்.

''க்ஷத்திரிய சிகாமணிவளநாட்டுப் பட்டினக் கூற்றத்து நாட்டாரும் பிரமதேயக்கிழவரும் தேவதானப் பள்ளிச் சந்தக்காணி முற்றூட்டுவிட்ட பேரூர்த்தலைவர்களும்

நகரங்களில் உள்ள தலைவர்களும் அறிக கிடாரத்தரையன் சூளாமணிவன்மன் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டினக் கூற்றத்து எடுப்பிக்கின்ற சூளாமணிவன்மவிகாரத்துப் பள்ளிக்கு வேண்டும் நிவந்தத்துக்காக க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப்பட்டினக் கூற்றத்தைச்சேர்ந்ததும், தொண்ணூற்றேழே இரண்டு மாமுக்காணி முந்திரிகைக் கீழரையே இரண்டு மா நிலமுடையதும், எண்ணாயிரத்து நாற்பத்து முக்கலனே இருதூணிக்குறுணி ஒரு நாழி நெல் வருவாயுடையதுமான ஆனைமங்கலம் என்னும் ஊரை யாண்டு இருபத்தொன்றுவது முதல் 'எளிச்சந்த இறையிலி'யாக வரியிலிட்டுக்கொடுக்க-'' என்பது இராசராசன் ஆணை.

இவ்வாறு உதவிபெற்ற பர்மாநாட்டு மன்னன்விகாரை கட்டி முடியுமுன்னரே மறைந்ததும், பட்டத்துக்குவந்த அவன்மைந்தன் மாறவிசயோத்துங்கவன்மன், இராசராசன் உதவியோடு அதைக் கட்டிநிறைவேற்றினன் என்ப. இந்தப்பர்மா நாட்டரசன் விகாரை அமைந்த இடத்தைச் சோழகுலவல்லி பட்டினம் என்று பெயர் வழங்கச்செய்ததோடு, இராசராசன் பெயர் நின்று நிலவுமாறு விகாரத்தின் ஒரு பகுதிக்கு இராசராசம் பெரும்பள்ளி எனவும் பெயரிட்டான்.

இந்தப் பணி பழையவரலாற்றில் சுவையான தொரு பகுதி. முன்னர் சயிலேந்திரன் என்னும் வெளிநாட்டரசன் நாளந்தாவிதில் புத்த விகாரை ஒன்றைக் கட்டிப பெருமைபட்டபோது. பர்மா நாட்டு மன்னன் சூளாமணிவர்மன் தமிழ்நாட்டில் தானும் ஒரு புத்த விகாரையை அமைக்க விரும்பினன். அவனுடைய விருப்பத்துக்கமைவாக நாகபட்டணம் அமைவதாயிற்று நாகபட்டணத்தில் என்றோ எப்பவா சீன தேசத்து மன்னன் அமைத்த விகாரை பழுதுபட்டிருப்பதை நல்லமுறையில் திருத்திவமைப்பதற்குப் பர்மா நாட்டுமன்னன் விரும்பினன். அவன் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக இராசராசன் தன் அமைச்சர்களையும் அரசியற் சுற்றத்தவர்களையும் அழைத்துப் பேசி ஆவனசெய்தான் என்பதே வரலாறு.

### கல்வெட்டு வாசகங்களில்

இராசராசன் அரசியல் அறிவிலும் உலகியல் அறிவிலும் தமிழறிவிலும் சைவசமய அறிவிலும்சிறந்துவிளங்கியவன். அவனுடைய சிறப்புக்கள் யாவும் மெய்க்கீர்த்திகள் என்னும் கல்வெட்டு வாசகங்களாலும் செய்யுள்களாலும் அறியக்கிடக்கின்றன. மெய்க்கீர்த்தி என்னும் புதிய முறையிலமைந்த கல்வெட்டுக்களை அவனே முதலில் ஆரம்பித்தவனுமாவன்.

இராசராசனின் ஆளுமை அவன் அமைத்த சோழப்பேரரசின் பரிபாலனத் திறத்தாலும், அவன் வென்ற பல நாட்டு மன்னர்களை அடக்கியாண்ட திறத்தாலும், அவனுக்கீழ் அடங்கிவாழ்ந்த சிற்றரசர்களின் மேம்படியினாலும், அவர்களின் விசுவாசத்தினாலும் இன்னபிற கீர்த்திகளினாலும் அறியக்கிடக்கிறது.

இராசராசன் தன் ஆளுமையாலும் அரியபடைகளின் துணையாலும் அகலித்து அமைத்த சோழப்பேரரசில் சிற்றரசர்கள் பலர் இருந்தார்கள். அவர்களுள் மலையமான்கள், அதியமான்கள், காடவராயர், பாணராயர், தெலுங்குச்சோழர், பொத்தப்பிச்சோழர் முதலானோர் ஒருசிலர் இவ்வண்ணம் பெயர்கள் அமைத்த பலர் சிற்றரசர்களாயிருந்து, ஆண்டுதோறும் இடுதிறை கொண்டு வந்து குவித்துத் தொழுது ஏத்தியமையோடு, வேண்டிய சமயங்களில் தங்கள் பகுதிகளிலிருந்து படைவீரர்களை நடத்திச் சென்று பேரரசன் செய்த போர்களில் பக்கத்துணையாயும் இருந்தனர்.

### விருதுப்பெயர்கள்

இராசராசனின் ஆளுமையை முற்றாக, முழுவதாக அறிந்து கொள்வது இயலாது. அவன் காலந்தோறும் பெற்றுவந்த விருதுப்பெயர்கள் அவன் ஆளுமையை ஓரளவுக்கு அளக்கின்றன. அவன் அரசர்கள் பலரை வென்றடக்கியதால் பெற்ற பெயர் இராசராசன் என்பதைப் பலமுறை அறிந்துள்ளோம். அவன் சென்றவிடங்களெல்லாம் பெருவெற்றியீட்டியதால் பெற்ற பெயர் சயங்கொண்ட சோழன் என்பதாகும். அவன் பாண்டியனையும் சேரனையும் வென்றதால்-சேர, சோழ, பாண்டிய நாடுகளின் ஆதிபத்தியம் அடைந்ததால் - பெற்ற பெயர் மும்முடிச் சோழன் என்பதாகும். அவன் குடிமக்கள், பொதுமக்கள் தம் பாராட்டையும் அபிமானத்தையும் அன்பையும் பெற்றவனாயால் பெற்ற பெயர்கள் சனநாதன், சனவிநோதன் என்பனவாகும். அவன் சோழமன்னர்களுள் ஆட்சித் திறத்தாலும், போர்த்திறத்தாலும், பகைவரைக் கையாளுந் திறத்தாலும் இன்ன பிற சிறப்புத் தன்மைகளாலும் எல்லோரையும் விஞ்சி நின்றமையால் பெற்ற பெயர் நிகரிலிசோழன் என்பதாகும்.

செந்தமிழ் வளம் பெற்று வளர்வதற்காக இயல், இசை, நாடகம் ஆகிய முத்துறைகளையும் பேணிப் பாதுகாப்பதற்கு அவன் ஆதரவளித்தமையால் பெற்றபெயர் நித்தவிநோதன். விநோதன் என்பதால் அவன் தானும் மகிழ்ந்து மற்றவரையும்மகிழ்வித்தவனுவன் என்பர் அவன் வேத்தியல் அரசர் குலத்தவர் பெருமக்களுக்கான கூத்து வகைகளையும், பொதுவியல் என்னும் பொது மக்களுக்கான கூத்து வகைகளையும் வளர்த்தவன்; வரிசையறிந்தவன் அவன் இராசராசன் என்னும் பெயரை முதலிற் பெற்றவனுகையால் வழங்கிய பெயர் முதலிராசராசன். அவன் இந்திரச் சிறப்பும் இங்கதின் வலிமையும் பெற்றவனாகையால் பெற்ற பெயர் சோழேந்திரசிங்கன் அவன் இந்தப் பெயர் நிலைக்குமாறு தான் கட்டிய திருக்கோயில் ஒன்றுக்குச் சோழேந்திரசிம்மேசுவரன் கோயில் எனப்பெயரிட்டுள்ளான் இன்னும் சூரிய குலத்தவராய சோழமன்னர்களுள் மாணிக்கம் போன்றவன் என்னும் கருத்தில் இரவிகுல மாணிக்கம் எனவும் பெயர் பெற்றிருந்தான் அவன் மன்னர்களுள் மிகுந்த சிறப்புப் பொருந்தியவனுகையால் க்ஷத்திரியசிகாமணி என்றும், மன்னர்களின் அபிமானம் அன்பு

(10-ம் பக்கம் பார்க்க)

# இடி அமினின் அரசியல்—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிஞர்கள் அனைவரும் நாட்டைவிட்டு வெளியேறினர்கள்.

### மனித இரத்தம் சுவைப்பவர்

ஒரு சந்தர்ப்பத்தில் பிரிகேடியர் சாள்ஸ் அருப் (Charls Arube, கொலை செய்யப்பட்டார் அப்போது இடி அமின் அவரின் உடலைப் பார்ப்பதற்காக 'முலாகா' [Mulaga] வைத்தியசாலைக்குச் சென்றார் அங்கு வைத்திய நிபுணரை உட்பிரவேசிக்க வேண்டாம் என்ற உத்தரவை இடி அமின் விடுத்து விட்டுத் தனியாக அந்த பிரிகேடியரின் உடலிருந்த அறைக்குச் சென்று ஓரிரு நிமிடங்கள் தாமதித்து வந்தார் இச்செயல் பின்பே தெரியவந்தது. அதாவது இடி அமின் இரத்தத்தை சுவைப்பதில் பிரியர் என்பது.

### காடையர்களின் தலைவர்

இடிஅமின் தனது மெய்க்காவலுக்காகவும் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் 15 000 காடையர்களைத் தன்வசம் வைத்திருந்தார்.

ஒரு முறை இடிஅமினின் காடையர்களால் வைத்தியத்தாதிமாருக்குப் பெரும் சோதனையேற்பட்டது. சுற்றுலா ஒன்றுக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த ஒரு பஸ் நிறைந்தவைத்தியத்தாதிமாரை இரவு 2 மணியளவில் பஸ்ஸிலிருந்து இறக்கி ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக நடக்குமாறு ஆயுத முனையில் பணித்தனர். பின்னர் அந்தாதிகள் அனைவரும் மிக்க கொடூரமான முறையில் கற்பழிக்கப்பட்டனர்.

நாளடைவில் இடிஅமின் மீது உகண்டா மக்களுக்கு மிகுந்த வெறுப்பு ஏற்பட்டது. இடி அமினின் ஆட்சி ஒழிய வேண்டும் அல்லது அவர் கொலை செய்யப்படவேண்டும் என்று சகலரும் எண்ணினர்கள். ஆனால் இவ்விரு வேலைகளும் அன்று இலகுவாக செய்து முடிக்கக் கூடியதாகவிருக்கவில்லை.

இதேவேளை சர்வதேச ரீதியிலும் எதிர்ப்பைத் தேடிக்கொண்டார்இடி அமின் தன்சானியா, சம்பியா, கென்யா போன்றநாடுகள் இடிஅமினின் போக்கை வன்மையாக கண்டிக்கத் தொடங்கின.

'உகண்டாவில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன' என்று 1977 ஜூன் மாதம நடந்த பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிலும் அமினுக்கு எதிராகக் குரல் கொடுக்கப்பட்டது. கென்யா இடி அமினுக்கு எதிராகச் செயல்பட ஆரம்பித்தது எரிபொருள் வழங்கலை அது உடன் நிறுத்திவிட்டது

இவ்வாறு கென்யா செயல்பட்டது. தன்சானியாவிற்கு நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது. மில்டன் ஒபேட்டுக்கு ஆதரவளித்து வந்த தன்சானியா இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இடிஅமினை ஆட்சியிலிருந்து வீழ்த்தி மீண்டும் ஒபட்டேக்கு உகண்டாவைக் கைப்பற்றிக்கொடுத்தது.

இந்நிலையில் இடிஅமின் லிபியாவிற்கு ஓடித்தப்பினர் அதன் பின்னர் மில்டன் ஒபட்டேயின் அரசு கடந்த மாதம் கவிழ்க்கப்பட்டது மில்டன் ஒபட்டே அவ்வேளை 150 உகண்டாப் பிரஜைகளுடன் சாம்பியாவுக்கு ஓடித்தப்பினர். அவரை இராணுவத்தளபதி ஒக்கெலாபதவி கவிழ்த்தார். சென்றவாரமோ ஒக்கெலாவின் ஆட்சியில் பிரதமராக இருந்த முகாம்சா என்பவரை அவர் பதவிநீக்கம் செய்துள்ளார். 'பதவி கவிழ்க்கும் படலம்' உகண்டாவிற்கு இப்போ சர்வசாதாரணமாகி வருகின்றது.

## தமிழ்வாழ அருள்வாய்

மருதடி விநாயகனே மாண்புமிகு கணபதியே
முருகனுக்கு மூத்தவனே மூஷிக வாகனனே
விருப்பியே உறைவதற்கு விளாவெலி வந்தவனே
அருமருந்தாம் திருவருளை அடியார்க்கு அருள்வாயே

மங்கல விநாயகனே மாங்கனியைப் பெற்றவனே
பொங்கல் இடுகின்றேன் பூசையொன்று செய்கின்றேன்
மங்களமாய் வாழ்த்துகின்றேன் மடையொன்று
போடுகின்றேன்
தங்கு தடையில்லாமல் தமிழ்வாழ அருள்வாயே.


— தென்மட்டுவில் சி. சதாசிவம்

● விளாவெலி மருதடி வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகிறது.


## ஓராண்டு நினைவஞ்சலி

### திரு. க. இரத்தினம்

(இளைப்பாறிய தலைமையாசிரியர் உடுப்பிட்டி)



வாழ்க்கை என்ற கடலில் குடும்பம் என்ற படகை துணிவே துடுப்பாக, தனிமை, கஷ்டங்கள், எதிர்ப்புகள் என்பவற்றிற்கு சவாலாக கரைகாணவைத்த தந்தையே உங்கள் அன்பும் ஆசியும் எங்களுக்கு என்றும் துணைநிற்கும் நாம் வாழ்கின்றோம் என்றால் அந்த வாரமே தாங்கள் தான், நல்லறிவு, நற்பண்பு, நல்லறம் கொண்ட இல்லறயோகியே உங்கள் ஆத்மாவை ஆசீர்வதிக்க எமக்கு தகுதியில்லை. தாங்கள்தான் எம்மை ஆசீர்வதிக்க வேண்டும். என்றும் நாம் உங்கள் ஆசிவேண்டிநிற்கும் அடிமைகள். ஆண்டொன்று போனாலும் உங்கள் மலர்ந்த முகமும் கனிந்த பார்வையும் அறிவுரைகளும் எங்கள்மனதையும் நினைவையும் விட்டுஎன்றும் அகலாது.

உங்கள் பிரிவால் மனம்கலங்கும்
பிள்ளைகள்.

558

# தமிழ் மாணவர்களுக்கு ஆங்கிலம் அவசியமா?

'ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி' (Oxford English-Dictionary) தொகுப்பாளர் றொபேர்ட்பேர்ச் பீல்ட் (Robert Burch Field) என்பார் பின்வருமாறு ஆங்கில மொழியைப் பற்றிக் கூறுகிறார்.

"இன்று விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ ஆங்கிலம் உலகின் பொதுமொழியாக (Lingna Franca) அமைந்து வளர்ந்து வருகின்றது. கிட்டத்தட்ட 70 கோடி மக்கள் ஆங்கில மொழியைப் பேசுகிறார்கள். அதாவது இது உலகின் முழுச் சனத்தொகையின் ஏழிலொரு பங்காகும். மேலும் ஒரு காலத்தில் உலகின் இராஜதந்திர மொழியாக அமைந்திருந்த பிரெஞ்சு மொழியின் இடத்தை ஆங்கிலம் எடுத்துவிட்டது. விஞ்ஞான ஆராய்ச்சிக்காக அத்தியாவசியமாகத் தெரிந்திருக்க வேண்டியிருந்த ஜேர்மன் மொழியின் இடத்தினையும் இன்று ஆங்கிலம் கைப்பற்றி உள்ளது. மருத்துவம், மின்னியல் அணுவியல், விண்வெளியியல் நுட்பம், சர்வதேச வியாபாரம், விளம்பரம், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற நிலைகளிலும் ஆங்கிலம் முழுமையான இடத்தைக் கைப்பற்றி உள்ளது."

இவரது கூற்றை நிரூபிக்கும் பொருட்டு இன்றைய உலகில் அனேக அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டுமக்களும் ஆங்கில மொழியைக் கற்று வருகிறார்கள். 100 கோடிக்கு மேலான மக்கள் சீன மொழியினைப் பேசுகிறார்கள். அப்படி இருந்தும் சீனர் அல்லாதவர்கள் அம் மொழியினைப் பேசுவதில்லை, ஏன்? ஒரு மொழியைப் பேசும் மக்கள் ஒரு உலகில் பரந்தளவில் அரசியல் ஆதிக்கம் பெறாது இருந்தாலும் அம் மக்களது மொழி இடத்தில் செறிவாக வாழ்ந்தும் உலகின் பொதுமொழியாக வளர்ந்து வரச் சான்றுகள்தோன்ரு. சீன மொழியும் அவ்வாறான ஒன்றே ஆங்கிலமொழி இங்கிலாந்து தீவில் தோன்றி வளர்ந்து வந்த போதிலும் உலகில் ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கத்தின் மூலம் உலகின் பொது மொழியாக ஆங்கிலம் வளர்ந்து விட்டது.

சூரியன் எமது சாம்ராஜ்யத்தில் அஸ்தமிப்பதில்லை என்று பெருமைப்பட்ட இங்கிலாந்தின் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சிலின் ஆசை 2-ம் உலகப் போரின் பின் ஆங்கில சாம்ராச்சியம் சிதைந்ததன்மூலம் நிராசையான போதிலும் ஆங்கில மொழியோ சிதையவில்லை. காரணம் நீண்ட காலமாக ஆங்கிலம் குடியேற்ற நாடுகளில் பலாத்காரமாகத் திணிக்கப்பட்டு ஆட்சிமொழியாக விளங்கியமையே ஆகும். ஆங்கிலமொழி ஆதிக்க வளர்ச்சியை ஜேர்மனியரும், பிரெஞ்சுக்காரரும் முழுமூச்சாக எதிர்த்து வந்தபோதிலும் எவ்வாறோ இன்று ஆங்கிலம் முதலிடத்தைப் பிடித்துவிட்டது.

இதற்கான முக்கிய காரணங்கள் இரண்டு;

(1) மொழி வளர்ச்சிக்கும், பரம்பலுக்கும் இடைவிடாது உழைக்கவல்ல சுதந்திர தன்னுட்சி நிறைந்த பிரிட்டனும்.

(2) ஆங்கில மொழியை வலியுறுத்தி வளர்த்துவரும் வல்லரசாகிய அமெரிக்காவுமே.

**எஸ். பி. ஐயர்**

இந்த அரசியல் சித்தாந்தத்தை நன்குணர்ந்த நம் அரசியல் தீர்க்கதரிசிகளும் எமது தாய்மொழியாம் தமிழுக்கும் அரசியல் அந்தஸ்து வேண்டும் எனப் போராடத் தொடங்கினர். மொழி அரசியல் அந்தஸ்து பெறவேண்டின் அதற்கு ஒரு நாடு வேண்டும். நாம் இன்று நாடற்ற பிரஜைகளாக இருந்தும் எமது தாய்மொழியான இனிய தமிழ் ஆனது வளர்ச்சிகுன்றாது வளர்ந்து வருகிறது. இதன் காரணம் எம் மொழியின் தொன்மையே.

சேர சோழ பாண்டியர் காலம் தொட்டு வளர்ந்து வந்த எம் மொழியானது இலக்கண இலக்கியச்செறிவு பூரணத்துவம் அடைந்த ஒன்ருகும். ஆகவே இன்று எம் மொழிக்கு அரச அந்தஸ்து இல்லாதபோதிலும் வளர்ச்சி குன்ருதுள்ளது. இனி இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டரசாங்கம் மொழி வளர்ச்சியில் ஏற்படுத்தும் பணியை பெரிதுபடுத்துகிறார்கள் ஆனால் அங்கும் தமிழ் மொழி, கலாசார, வளர்ச்சி மத்திய அரசின் கட்டுப்பாட்டுள்ளேயே அமைகிறது இந்தப் பின்னணியில் ஆங்கில மொழியை எடுத்துக் கொள்ளும்போது அதற்கு அரசியல் கலாசார வலுவூட்ட வல்லரசாகிய அமெரிக்கா மட்டுமல்ல தாய்நாடான இங்கிலாந்து குடியேற்ற நாடுகளாகிய அவுஸ்திரேலியா, ரஸ்மேனியா, நியூசிலாந்து கனடா போன்ற நாடுகள் உள்ளன. மேலும் பல்லின மொழிபேசும் மக்கள் தங்கள் இரண்டாம்மொழியாக ஆங்கிலத்தை கற்றுவருகிறார்கள்.

இன்றைய உலகில் சர்வதேச வியாபாரத்துறையில் ஆங்கிலமொழி மிக அவசியமாகத் தேவைப்படுகிறது யப்பான், சுவீடன், மெக்சிகோ, சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற வியாபார கேந்திர நிலைகளில் ஆங்கிலம் வேரூன்றிவிட்டது அத்துடன் ஏராளமான சர்வதேச மகாநாடுகளில் பொதுமொழியான ஆங்கிலமே கையாளப்படுகிறது. இன்று ருஷ்ய ஜனாதிபதியான குரோமிக்கோ முதல் இஸ்ரேல், பிரெஞ்சு ஜனாதிபதிகளும் ஐ நா சபை போன்ற சபைகளில் ஆங்கிலத்தில் சரளமாக உரைநிகழ்த்த வல்லவர்களாக உளர்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் ஜேர்மனிய விஞ்ஞானப் பேரறிஞர்கள் இங்கிலாந்துக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடம் பெயர்ந்ததுடன் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஜேர்மன் மொழி வகித்த முக்கியத்துவம் குறைந்துவிட்டது. இன்று உலக விஞ்ஞான ஆராய்ச்சிக் கட்டுரைகளில் 80 சதவீதமானவை ஆங்கில மொழியிலேயே பிரசுரிக்கப்படுகின்றன கேள்விக்கு இடமின்றி இவ்வுலகில் உள்ள போக்குவரத்து தொடர்பு சாதனங்களில் ஆங்கில மொழியையே உபயோகிக்கின்றனர். விமான சேவை, வங்கி நிர்வாகம், கணனித் தொழில் நுட்பம், மின்னியல் தொழில் நுட்பம் போன்றனவற்றுக்கும் ஆங்கிலமே அவசியமாகப்படுகிறது.

ஆங்கிலக் குடியேற்ற ஆட்சி பரவலாக்கலினால்தான் ஆங்கிலம் சர்வதேச அந்தஸ்தை அடைந்தது என்பதை முற்றாக ஏற்கவும் முடியாது. இன்று மத்தியகிழக்கு அரேபிய நாடுகள், யூகோஸ்லேவியா, யப்பான், மேலும் ஆங்கில ஆட்சிக்கு ஒருபோதும் உட்படாத ஆபிரிக்க ஆசிய நாடுகளிலும் ஆங்கிலமொழியைக் கற்றுவருகிறார்கள். இந்நாடுகளில் ஆங்கிலத்தை இரண்டாவதுமொழியாகக் கற்பிப்பதற்கு ஏராளமான பணம் செலவழிக்கப்படுகிறது. எமது நாட்டைப் பொறுத்தவரை பிரிட்டிஷ் ஸ்தானிகராலயத்தைச்சேர்ந்த கலாசாரப்பிரிவு (British Council) ஆங்கில மொழியினைத் திறம்படக் கற்பிப்பதற்குத் தாராளமானவசதிகளை செய்து வருகிறது. அதோடு போட்டி போடுவது போல் அமெரிக்கத் தூதராகக் கலாசாரப்பிரிவும் ஏராளமான புத்தகங்களையும் உபகரணங்களையும் இலங்கை அரசிற்குக் கொடுத்து உதவி வருகிறது இவ்விரு பகுதியினரது உதவியும் இலங்கை அரசின் கல்வித்திணைக்களம் ஊடாகவே செய்யப்படவேண்டியுள்ளது. அதன் பலாபலன் எம்மவருக்கு சொல்லாமலே விளங்கும். தமிழ்ப் பிரதேசப் பாடசாலைகள், வளாகங்கள் இவ்வுதவிகளினின்றும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. பிரித்தானிய கலாச்சாரப்பிரிவு (கிளை நிறுவனம்) கண்டி நகரில் இயங்கி வருகிறது. மட்டுநகரிலோ அல்லது திருகோணமலையிலோ அல்ல. இக்கட்டத்தில் தான் தமிழ்பேசும் மாணாக்கரது ஆங்கிலமொழி வளர்ச்சியைக் கண்ணுற வேண்டி உள்ளது.

உண்மையில் மேலே கூறப்பட்ட பலகாரணங்களுக்காகத் தமிழ் மாணவர்களும் இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தைப் பயிலவேண்டும். அதற்கேற்ற வாய்ப்பையும் வசதியையும் செய்வது யார்? இவ் விடயத்தில் செவிலித்தாய் வளர்ப்புப் பிள்ளைகளாக நம் மாணவர் உளர். அரசியல் விடிவு ஏற்படும்போதுதான் ஆங்கில மொழியினைத் திறம்பட கற்பிக்க வல்ல ஓர் நிரந்தர வாய்ப்புவசதி இங்கு ஏற்படும் எனலாம்.

ஆங்கில உச்சரிப்பினையே தமிழ் மயமாக்கி உச்சரிக்கும் நம்மிற் பலருக்குப் பிறநாட்டு மேற்படிப்பு வாழ்க்கைமுறை கொஞ்சம் கடினமே. 83 கலவரத்தில் பாதிப்புற்ற வசதி படைத்த சில குடும்பத்தினர் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் சென்றுள்ளனர். எம்மவர்கள் அங்கு உயர் கல்வி கற்பதற்குக் கடினப்படுகிறார்கள். தமிழ்மொழிபேசுபவர்களாகிய எமது ஆங்கிலப் பேச்சின் உச்சரிப்பு வேறுபாட்டுக்குத் தமிழ் மொழியின் ஒலி அமைப்பு ஆங்கிலத்தில் ஏற்படுத்தும் தாக்கமே முக்கிய காரணம்.

எமது ஆங்கில ஆசிரியர்கள் ஆங்கிலம் கற்பிப்பது இன்னும் பழைய மரபு வழிவந்த முறைக்கு உட்பட்டதாகவே உள்ளது. தற்காலத்தில் 'Toefl' எனும் சர்வதேச ரீதியில் நடாத்தப்படும் ஆங்கில மொழிப்புலமைப் பரீட்சை முறையில் கையாளப்படும் ஒலிப்பதிவு நாடா போன்ற புதிய உத்திகளை ஆங்கிலம் கற்பிக்க மிகச் சிறப்பாக கைக்கொள்ளலாம். மொழியியல் (Linguistics) வளர்ச்சி காரணமாகப் பற்பல புதிய கற்பிக்கும் முறைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன இவற்றைஅறிந்து கற்பிப்பது ஆர்வம் மிக்க ஆசிரியர்களது கடமையாகும். BBC இல் தொடர்ச்சியாகக் கையாளப்பட்டுவரும் ஆங்கில நடை (Standard British English) தரமான ஆங்கிலமாக இன்று கருதப்படுகிறது இது சர்வதேச ரீதியில் அதிக அளவில் எல்லோராலும் புரிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது. பல நாடுகளிலும் பயிற்றப்பட்டுவரும் இத்தராதர ஆங்கில மொழியில் புலமை அடைந்து சர்வதேச ரீதியில் எமது ஆற்றலும் அறிவும் துலங்குவதற்கு நாம் முயற்சி மேற்கொள்வது அவசியம்.

## கன்னிச் சீதை காத்திருக்கிருள்!

அந்த
கன்னிச் சீதை
காத்திருக்கிருள்
ஒரு
இராமனைத் தேடி!
அந்த
மின்னல் இடையாளின்
பின்னல் சடையுள்ளும்
வந்துவிட்டது
வெள்ளை மின்னல்கள்!
அவள்
கல்லூரித் தோழியின்
குழந்தைக்கு கூட
ஆறு வயது
ஆரம்பித்துவிட்டது!
அந்த
கன்னிச் சீதை
காத்திருக்கிருள்
ஒரு
இராமனைத் தேடி...!
சமுதாயச் சமுத்திரத்தில்
அணை கட்டி...
ஒரு ஸ்ரீராமன்
சீதை
சிறை மீட்பான் என்று
அந்த
கன்னிச் சீதை
காத்திருக்கிருள்!

—அ. தத்வசுதன்

## சிவானந்த போதம்

இல்லம் புனிதமான இடம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அனைத்துக் குழப்பங்களுக்கும், அமைதியற்ற செயல்களுக்கும், அன்ருட வேலைகளுக்கும் மாற்ருக, சமன் செய்யும் சாதனமாகக் குடும்பம் அமைந்திருக்கிறது. நீங்கள் வீட்டிலிருந்து புறப்பட்டு வேலைக்குச் செல்லும்போது, உங்கள் மனம், தோற்றம் அனைத்தும் வெளிக்கொணரப் படுகின்றன. நீங்கள் செயல் துடிப்புடன் இருக்கவேண்டும். நீங்கள் இந்த உலகியற் பொருள்களில் கவனத்தைச் செலுத்தவேண்டும். ஆகவே உங்கள் நினைவாற்றலை இழக்கிறீர்கள்.

நீங்கள் வேலையில் ஈடுபடும் போது உங்களது கேந்திரத்திலிருந்து வெகு தொலைவுக்குப் பிரிக்கப்பட்டிருக்கிறீர்கள் அக வாழ்வின் ஆண்டவனை நெருங்கி இருந்த அனுபவமானது முற்றிலும் இழக்கப்படுகிறது அன்ருட வேலையினை முடித்துவிட்டு வீடு திரும்பும் போது, இல்லத்தின் வாழ்க்கை, தொழிலில் ஏற்பட்ட அனுபவத்திற்கு மாருனதாக அதைச் சமன்செய்வதாக அமைகிறது. இல்லத்தில் நீங்கள் ஆன்மாவைக் கேந்திரமாகக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு மீண்டும் சுயநினைவு திரும்புகிறது. நீங்கள் கடவுளிடத்தில் இருக்கிறீர்கள். ஆகவே உங்கள் இல்லம் முழுவதும் இறைவன் நிறைதிருக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்க வேண்டும்.

உங்கள் இல்லத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் இறைவன் இருப்பதை நீங்கள் உணர வேண்டும். நீங்கள் வீட்டுக்குள் நுழைந்ததும், காலையில் மதசார்பற்ற தொழில் சம்பந்தமான நடவடிக்கைகள் காரணமாக வலுக்கட்டாயமாக வெளிக் கொணரப்பட்ட மனம் மீண்டும் தனது சொந்த இடத்தில் அமர வேண்டும். மனம், இறைவனிடத்தில் ஓய்வும் அமைதியும் பெறுகிறது. இல்லத்தில் நடுநாயகமாக இறைவன் அமைந்திருக்கவேண்டும். "இது என்வீடு, இது எனது இல்லம்" என்று நீங்கள் எண்ணக்கூடாது. மாருக இது இறைவனின் இருப்பிடம் இங்கு இருக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. நான் வீடு பேறு அடைவதற்கான பணிகளை இங்கு இருந்து செய்யும் நல்லதொரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. என்று எண்ண வேண்டும். கணவன் மனைவி இருவரின் எண்ணம் இதுவாகவே இருக்கவேண்டும் இந்த வகையில் தான் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கவேண்டும்.

வீட்டுச் சூழ்நிலை அநாகரிமானதாக ஆக்கப்படக்கூடாது. வீட்டை ஒரு கண்காட்சி சாலையாக ஆக்கக்கூடாது. உங்கள் செல்வச்செழிப்பையும் உங்களுக்கு மிகவும் பிடித்தமானவற்றையும், உங்கள் உடைமைகளையும் பிறருக்குக் காட்டிப் பெருமைப்படுக்கொள்ளும் இடமாக வீட்டை ஆக்கக்கூடாது மதுவிருந்து நடத்துதல், அளவுகுறையாகக் குடித்தல், வெறியூட்டும் இசை, இரைச்சல் குழப்பம், சீட்டாட்டம் என்பனபோன்ற புன்வழி இன்பம் நாடும் பொழுதுபோக்குகளுக்கான இடமாக இல்லம் ஆகக்கூடாது வீட்டுச் சூழ்நிலையின் புனிதமான தூய்மையான தன்மை ஆகியவை மிகவும் முக்கியமானவையாகும். வீட்டை எப்போதும் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும் இது மிகவும் அவசியம். இல்லத்தைப் புனிதம் மிக்க இடமாக ஆக்குங்கள் நீங்கள் இறைவனுக்கு அருகில் இருக்கும் இடமாக இல்லத்தை எப்போதும் கருதுங்கள்.

க. க.

★ இன்று சிவானந்த மகரிஷியின் 98வதுபிறந்த தினம்.


"உன்னைத் திருத்திக் கொள், சமூகம் தானகவே திருத்திவிடும்."

— சுவாமி சிவானந்தர்



இன்று சுவாமி சிவானந்த மஹரிஷி அவர்களின்

**98வது பிறந்த நாள்**

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளை அனுப்பி சுவாமி சிவானந்தரின் அழகிய ஸ்ரிக்கர் ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் புதிய சிராக்கிய சேர்முறையில் தயாரிக்கப்பெற்று. நிறை கட்டப்பட்டு விலைக்குறைப்புடன் எங்கும் விற்பனையாகின்றன. மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் பணத்துக்கு அதி உன்னத பெறுமதி வாய்ந்தவை.

**மில்க்வைற்**
யாழ்ப்பாணம்.

## ஆறுவதுமாத அஞ்சலி

# நன் மாணுக்கரை உருவாக்குவதில் தம் திறன் அனைத்தையும் பயன்படுத்தியவர் கே.எஸ்எஸ்

அமரர் திரு. கே. எஸ். சுப்பிரமணியம், அவரது உயர்ந்த சேவையின் அர்ப்பணிப்புக் காரணமாக 'யாழ் இந்துக் கல்லூரி'யுடன் இணைத்து நினைவு கூரப்படவேண்டிய ஒருவராகின்ருர்.

இக்கல்லூரியின் மாணவ சந்ததியினர் பலரை நன்கு கற்பித்து, நன்மாணுக்கராக்குவதில் இவர் தமது திறமை அனைத்தையும் வெளிப்படுத்திஞர்

1930-ம் ஆண்டுகளில் இவரது மாணுக்கனுகும் நல்வாய்ப்பைப் பெற்றிருந்தேன். எனது இறு பராயத்தில் அவர் போதித்த நற்கருத்துக்கள் எனக்குப் பெருந்துணையாக இருந்து வந்துள்ளன.

விடுதி ஆசிரியராக அவர் இருந்தபோது எமக்கெல்லாம் அதுஒரு 'இரண்டாவது வீடு' என்ற உணர்வை அவர் ஏற்படுத்திஞர். கூடவே பெற்றோர்களுக்கு வேண்டிய கரிசனையுடன் எம்மையெல்லாம் பராமரித்தார். ஒவ்வொரு விடுதி மாணவன் மீதும் அவர் தனிப்பட்ட கரிசனை செலுத்திஞர்.

மாணவர்களைப் பயமுறுத்தி அவர்களைத் துன்புறுத்துவதை அவர் தமது வழக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

இருந்தபோதிலும் அவரது பிரம்படியிஞல் எந்தஒரு மாணவனும் அவர்மீது மனஸ்தாபப்படவில்லை. ஏனெனில் அந்த 'அடியின்' நோக்கம் தம்மைத் திருத்துவதற்கே என்பதை அவர்கள் நன்கறிந்திருந்தனர்.

யாழ் இந்துக் கல்லூரியிலிருந்து நான் விடைபெற்ற போது "நீ யாழ். இந்துக் கல்லூரியைப் பெருமைப்படுத்த வேண்டும். அது உன்னிடமிருந்து ஏராளமாக எதிர்பார்க்கிறது" என்று அவர் என்னிடம் தெரிவித்தது இன்றும் என் நினைவில் நிற்கின்றது.

எனக்கு மிக ஊக்கமளிப்பதாக இந்த வசனங்கள் அமைந்திருந்தன. அவரைக் கண்டு "உங்கள் எதிர்பார்ப்பை நான் பூர்த்திசெய்து விடடேஞ?" என்று கேட்கவிருந்தேன்: ஆனல் அதற்குள் அவர் மறைந்துவிட்டார்.

உலகில் கிடைக்கும் வெற்றிகளால் ஒரு ஆசிரியரின் தன்மை மதிப்பிடப் படுவதில்லை தமது மாணவர்களின் மதிப்பையும், அன்பையும் எவ்வளவு தூரம் பெற்றுள்ளார் என்பதிலேயே அவர் மதிக்கப்படுகின்ருர்.

யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டம் கொழும்பில் நடைபெற்ற போது, கே. எஸ். எஸ் அதற்கு சமூகம் தருகிருர் என்று கூறப்பட்டது. அப்போது அக்கூட்டம் ஒரு பூரண கூட்டமாக அமைந்திருந்தமை அவர்மீது மாணவர்கள் கொண்ட அன்பையும், மதிப்பையும் வெளிக்காட்டுவதாக அமைந்திருந்தது

பிரதம நீதியரசர்,
எஸ். சர்வானந்தா

●

### சட்டமா அதிபர் சிவாபசுபதி

சட்டமாஅதிபர் திரு. சிவாபசுபதி தமது அஞ்சலியில் தெரிவிப்பதாவது;

எல்லோராலும் கே. எஸ். எஸ். என்று விரும்பி அழைக்கப்பட்ட அமரர் திரு கே எஸ் சுப்பிரமணியம் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சரித்திரத்தில் ஒரு பாகமாக விளங்குவார்.

திரு. சுப்பிரமணியம் மிகவும் கண்டிப்பாக ஒழுக்கத்தைக் கடைப்பிடித்த பொழுதிலும் மாணவர்களின் அன்பிற்கும் மரியாதைக்கும் உரியவராகத் திகழ்ந்தார். நல்ல பல குணங்களையும், பண்புகளையும் ஒருங்கே அமையப்பெற்ற திரு சுப்பிரமணியம் போன்ற பெரியோரை அந்தக் காலத்திலும் சரி தற்போதும்சரி காண்பது அரிது கல்லூரியின் நலன்களில் அவர் மிகவும் அக்கறை காட்டிஞர் அத்துடன் பலவருடகாலமாகக் கல்லூரி விடுதிக்குப் பொறுப்பாக இருந்தார். மாணவர்களின் நலன்களை நன்கு கவனிப்பதற்காக எந்த வேலைப் பளுவையும் ஏற்பதற்குத் தயாராக இருந்தார்.

திரு சுப்பிரமணியம் ஆசிரிய உலகத்திற்கு ஒருஎடுத்துக் காட்டாக, முன்மாதிரியாகத் திகழ்ந்தார். அவர் தனது பணிக்குத் தன்னை முற்ருக அர்ப்பணித்ததுடன் கல்லூரியினதும், மாணவர்களினதும் முன்னேற்றத்துக்காகத் தனது நேரத்தையும் தனது சக்தியையும் தியாகம் செய்ய முன்வந்தார்.

அவர் இன்று எம்மத்தியில் இல்லை. அவருடைய சீரிய முன்மாதிரியான வாழ்க்கை மாணவர்களாகிய எங்களை ஊக்குவித்தது போல அவருடைய பசுமையான நினைவுகள் ஏனையோரையும் அந்த உயரிய வாழ்வை வாழ எத்தனிப்பதற்கு நிச்சயம் ஊக்குவிக்கும்.

### புவியியற் பீடாதிபதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற் பீடாதிபதி பேராசிரியர் பொன்னுத்துரை பாலசுந்தரம்பிள்ளை தமது அஞ்சலியில் தெரிவிப்பதாவது;

திரு K. S. சுப்பிரமணியம் யாழ்ப்பாண இந்துக்கல்லூரியில் நாலு தசாப்தங்களுக்கு மேலாக கல்லூரி ஆசிரியராகவும் விடுதி அதிபராகவும் இருந்தார். இவரைக் K S S என்றுதான் எல்லாரும் அழைப்பர் இவருக்கு இந்துக்கல்லூரியில் தனிமதிப்பு இருந்தது. இவருடைய மிடுக்கான தோற்றத்தையும் தீட்சண்யமான பார்வையையும் கண்ட மாணவர் இவருக்கு அடங்கிவிடுதல் இயற்கை விடுதியில் வாழ்ந்த பலதிறப்பட்ட மாணவர்களையும் பெற்ற தந்தை போலக் கண்டிப்புடனும், அன்புடனும் நடாத்தி அவர்களை நல்வழிப்படுத்தி வேண்டியவாறு அவர்களைப் பராமரித்து நன்கு படிக்கச்செய்த பெருமை இவருக்கே உரியதாகும்.

1950 ஆம் 1960 ஆம் ஆண்டுகளில் இந்துக்கல்லூரி விடுதியில் 350க்கு மேற்பட்ட மாணவர்கள் இருந்தனர் விடுதியிலிருந்த மாணவர்களில் கூடிய தொகையினர் தீவுப்பகுதி, வன்னி, தென்மராட்சி, கரவெட்டிப் பகுதிகளைச் சேர்ந்த தமிழாசிரியர்களின் பிள்ளைகளாகும். கல்லூரி வளவிற்குள் புதிய விடுதி அமைப்பதற்கு முன்னர் பேபி போடிங், செட்டியர் போடிங் என இரண்டு விடுதிகள் கல்லூரி வளவுக்கு வெளியில் இருந்தன K S S. விடுதியை நடத்துவதில் மிகவும் வல்லமை பெற்றிருந்தார். மாணவர்களுக்குச் சிறந்த சைவச் சூழலில் மிகச் சிறந்த சைவ உணவு கொடுத்தார் விடுதியில் வாழாத கல்லூரி மாணவர்களுக்குப் பெருமளவில் விடுதிமதிய போசனத்தை விருப்பி உண்பதற்கு இவரே காரணமானவர் இன்றும் KSS இன் காலப்பகுதியில் விடுதியில் வாழ்ந்தமாணவர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும் பொழுது இந்தக் கல்லூரி விடுதி உணவு பற்றிக் கதைத்து அதனை நினைவு கூருவர் இவர்கள் விடுதி உணவு பற்றி யாருமே குறைகூறியது கிடையாது. திரு K S S. விடுதியைத் திறம்பட நடத்தியமைக்கு விடுதி உபஅதிபராக இருந்த திரு நமசிவாயத்தின் திறமையும் ஒத்துழைப்பும் உதவியாக இருந்ததெனலாம் இவரும் இன்று எம்முடன் இவ்வுலகில் இல்லை.

திரு K S S. விடுதி மாணவர்களை கல்வி, விளையாட்டு, விவசாயம் மற்றும் துறைகளில் ஈடுபாடு கொள்ள ஊக்குவித்தார். சில மாணவர்கள் விடுதியில் "ஸ்நானம்" "போசனம்" 'சயனம்' ஆகிய மூன்றுடனும் சிலர் "போசனம்" "சயனம்" ஆகிய இரண்டுடனும் இருப்பதாகக் கண்டித்து மாணவர்களை பலதுறைகளில் துடிப்பாக ஈடுபட ஊக்குவித்தார்.

திரு. K S S. கட்டட நிர்மாணத் துறையிலும் மின்சாரம் நீர் விநியோகம் ஆகியவற்றிலும் நல்ல அறிவும் ஆற்றலுமுடையவராக இருந்தார். இவரது முகாமையிலேயே புதிய விடுதி மண்டபம், குமாரசாமி கட்டடத்தின் பெரும் பகுதி, மற்றும் பல கல்லூரிக் கட்டடங்கள் கட்டப்பட்டன

ஆசிரியர் K S S. கண்டிப்பாக இருந்தாலும் உள்ளத்தால் பொய்யாது ஒழுகி கல்லூரிக்குப் பல வழிகளிலும் சேவை செய்து வந்தமையால் இக் கல்லூரி ஆசிரியர் மாணவர், பழைய மாணவர், பெற்ருேர், அயலவர் உள்ளங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார் இவர் சேவையாற்றிய காலம் யாழ் இந்துக் கல்லூரியின் சிறந்த காலமும் ஆகும்.

நானும் எனது ஆறு சகோதரர்களும் 1949க்கு 1974க்கும் இடைப்பட்ட 25 வருடகாலப் பகுதியில் இந்தக் கல்லூரி விடுதியிலிருந்து கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றமையால் திரு K S S நற்குணங்களையும் திறமைகளையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. எங்கள் முன்னேற்றத்தில் அவரின் பங்கு குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

இத்தகைய பெருமைமிக்க ஆசிரியர் திரு. K. S. சுப்பிரமணியம் அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்கிய அவரின் ஆன்மா இறைவனடியில் சாந்திபெற பிரார்த்திப்போமாக.

## தாங்கள் எவ்வினம்?

வல்லினம், மெல்லினம்... இடையினம்......

தம்பி,
செல்லனும் முத்தனும் என்ன சொல்லினம்?
இலக்கணத் தமிழை இஞ்சை ஏன் படிக்கினம்?

படிக்கவில்லை அப்பு, குடிக்கினம்!

என்ரை அப்பு! செல்லனும் முத்தனும்
வல்லினம் மெல்லினம் என்றேன் சொல்லினம்?

மெல்லினம் என்பது முட்டியில் இருப்பது
இடையினம் என்பது புட்டியில் அடைப்பது
வல்லினம் என்பது காய்ச்சி வடிப்பது.

முட்டியில் இருப்பது கள்ளுத்தானே
கட்டிய பனையில் வடியுந்தேனே
புட்டியில் அடைச்சது பியர் ஸ்ரவுட் தானே
குட்டி நெடுகிலும் குடிப்பது தானே
காய்ச்சி வடிப்பது என்னடா தம்பி?

காய்ச்சி வடிப்பது கசிப்பெனை அப்பு
கோச்சி போலவே கூவுமாமப்பு!
பூச்சி பூரான் தருவதோர் ரசிப்பு!

ஆச்சியறிய..! அதுசரி தம்பி,
செல்லனும் முத்தனும் அங்கை ஏன் கல்லினம்?

அவையள் வல்லினம்! ஆகையாற் கல்லினம்!

அதுசரி தம்பி, தாங்கள் எவ்வினம்?

தமிழினம் அப்பு! நாங்கள் தமிழினம்!

அரசியல் வேண்டாம். ரசவியல், எவ்வினம்?

எங்கள் பனைகள் பாலை தள்ளுது!
இயற்கையாய் மெல்லினம் இறக்கப்படுகுது!

என்கிற படியால் தம்பி மெல்லினம்

- சத்தியசீலன்

## பப்பா பெயர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அம்மா பிறந்த இடம்
பப்பா பிறந்த இடம்

தமிழ் மொழியிலான இவ் விஞக்களுக்கு விடைகள் சொன்ன பின்பு 'நன்றி' என்ற அப் பெண்மணி கூறியதைத் தொடர்ந்து ஆங்கில பாஷையில் மேலும் சில விளக்கங்களை சொன்னபோதுதான் வேறு நாட்டில் இருக்கும் உணர்வு வந்தது

இவ்வளவும் நடைபெற்ற இடம் பிரெஞ்சு நாட்டின் பாரிஸ் நகரிலுள்ள சித்தை (Cite) பொலிஸ் நிலையம். பேசும் மொழி: 'பிரெஞ்சு'

— கண்டோஸ்

## இராசராசனின்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நேசத்துக்குரியவஞகையால் இராசாசிரியன் என்றும், பாண்டியனை வென்றமையால் பாண்டியகுலாசனி என்றும். சேர மன்னனுக்கு இயமன் போன்றவன் என்னும் கருத்தில் கேரளாந்தகன் என்றும் சிங்களவர்களுக்கும் இயமன் போன்றவன் என்னும் கருத்தில் சிங்களாந்தகன் என்றும், பெரும் கீர்த்தி பெற்றவஞகையால் கீர்த்திபராக்கிரமன் என்றும். சோழமன்னர்கள் மாறிமாறி இராசகேசரி பரகேசரி எனப் பெயர் பெற்றவர்களுள் ஒருவஞகையால் இராசகேசரிவர்மன் என்றும் பெயர் பெற்றிருந்தான் எல்லாவற்றுக்கும் மேலாக அவன் சிவபெருமானிடம் கொண்டிருந்த பெரும் பக்தி, திருமுறைகளை வெளிக் கொண்டுவந்த தெய்வப்பணி தஞ்சைப்பெருங்கோயிலைக் கட்டிய பெருமுயற்சி ஈசானசிவாசாரியார், சர்வசிவபண்டிதர், கருவூர்த்தேவர், நம்பியாண்டார் நம்பிகள் முதலாஞேரிடம் கொண்டிருந்த சைவத் தொடர்பு முதலிய காரணங்களால் சிவபாதசேகரன் என்னும் பெருநாமம் பெற்றமையாகும்.

இங்ஙனம் அவன் பெற்ற விருதுப்பெயர்கள் யாவும் அவனுடைய ஆளுமையைக் குறிப்பன. அவனுடைய அரசகாரிய அலுவலாளர்கள் இப்பெயர்கள் என்றும் நின்று நிலவும் வண்ணம் சோழநாட்டின் உட்பிரிவுகளுக்கு இராசராசசேரி, இராசமார்த்தாண்டசேரி, அருள்மொழித்தேவச்சேரி, ஜனநாதச்சேரி நித்தவிநோதச்சேரி, நிகரிலிசோழச்சேரி சிங்களாந்தகசேரி என்றெல்லாம் பெயரிட்டனர்.

[வளரும்]

## ரோட்டறி தலைமை விருது பெற்றார்



கிளிநொச்சி-பரந்தன் ரோட்டறிக்கழகத்தின் 1984/85 ஆண்டின் சிறப்பான செயற்பாடுகளுக்காக ரோட்டேறியன் பா. வை. ஜெயபாலன் சர்வதேச ரோட்டறி தலைவரின் தலைமைத் தகைமைச் சான்றிதழுக்கு உரியவராக 322-ம் வட்ட ஆளுநரால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இக்காலகட்டத்தில் தலைவராக இருந்த இவர் மூன்று மாவட்டக் கழகங்களுக்கான ஆளுநர் பிரதிநிதியாகவும் இவ்வாண்டு நியமிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கடந்த பத்து ஆண்டுகளாகக் கிளிநொச்சியின் பல்வேறு சமூகசேவைச் சங்கங்களிலும் ருந்து தீவிரமாகச் செயற்படும் ஒருவர்

சிறந்த பேச்சாளரும் கவிஞருமான இவர் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி, யாழ்ப்பாண தொழில் நுட்ப நிலையம் ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

(கிளி.நிருபர்)

## மாற்றம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

-தம்பர் போட்ட கூச்சலிலே செல்லப்பர் பயந்து விட்டார். அப்பாவிச்செல்லப்பருக்குத் தெரியும், தம்பர் ஆளணி, உள்ளவர்; சொன்ஞல் சொன்னதைச்செய்து முடிப்பார் என்று. ஒருமாதத்துக்குள்ளே வீட்டைவிட்டு எழும்பவேண்டும் என்பதை நினைக்கச்செல்லப்பருக்குத் தலை இறுகிறுத்தது. அப்படியேவந்து பெண்சாதிக்கு விடயத்தைச்சொல்லி விட்டுப் படுத்தார். அன்று இரவு அவர் வீட்டில் யாருமே சாப்பிடவில்லை அன்று படுத்தவர் படுத்தவர் தான். மறுநாள் காலை மனைவி தொட்டுப் பார்க்கும்போது அவர் பிணமாகக்கிடந்தார்.

கிரியைகள் நடந்தன பிரேதம் எரிக்கப்பட்டு விட்டது. தம்பர் செல்லப்பருக்குச் சொன்ன விஷயமும் ஊரெல்லாம் பிரசித்தமாகிவிட்டது; மறுநாள் காலை ஒருவாணிலே ஐந்து 'பொடியள்' செல்லப்பர் வீடுவந்து மனைவியை விசாரித்தார்கள். அடுத்த நாள் பணத்தை ஆயத்தமாகக் கொண்டு சட்டத்தரணியின் வீட்டுக்குக்காலை ஒன்பது மணிக்கு வரும்படி சொன்ஞர்கள்

என்ன ஆச்சரியம் மறுநாள் காலை சட்டத்தரணியின் வீட்டுக்கு செல்லப்பரின் மனைவியும் மகளும் போனபோது அங்கே தம்பர் இவர்களை உறுதியோடு தயாராக இருந்தார்! பணம் கைமாறியது. தம்பரின் கையெழுத்தும் உறுதியில் பதிவானது. காலமாற்றமும் அங்கே நிதர்சனமானது.

செய்தி காட்டுத்தீபோல் பரவியது. பலர் தங்களுக்கும் தம்பருக்கும் நடந்த கதைகளையும் கணக்குகளையும் மீள யோசிக்கத் தொடங்கிஞர்கள் அவர்களில் முதலாமாளாகத் தங்கபுரத்து நல்லம்மாக்கிழவி தன் கணக்கை எடுத்துக் கொண்டு, இளைஞர்களை நோக்கிச் சென்ருள்.

மே(f)பெயர் மினி
சினிமா
(கன்னாதிட்டி சாவிகோவில் அருகில்)
10-30, 2-15, 5-15
சந்திரசேகர் - அம்பிகா
நடித்த
நாகம்
பாம்பினதும் நாயினதும்
சாகசம் நிறைந்த படம்

ராஜ்லி மினி
"K5" திரைவாவில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
California
Girls
அமெரிக்க பெண்களின்
பொழுது போக்குகளும்
சிறந்த பாடல்களும்
நிறைந்த படம்.
Adults only

வெலிங்டன்
10-30, 2-15, 4-15,
6-30, p.m.
26 ம் திகதி மட்டும்
THE STUNT MAN
பயங்கர காட்சிகள் நிறைந்த முதல்படம்.
யாழ்ப்பாணத்தில்;

ரீகோ சினிமா
10-30, 2-30, 6-30
3-வது மாதமாக
ஓடுகிறது!
சிவகுமார்,
சிவச்சந்திரன்,
பூர்ணிமா ஜெயராம்,
இலக்கியா, ஜெய்சங்கர்
நடித்த
சாறு மகேந்திராவின்
நீங்கள் கேட்டவை
கவிட்மன் கலர்

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, 4-30, 7-00
Private-Lessons
15 வயது பணக்கார சிறுவனின் teenage ஆசைகளை பயன் படுத்தி பணம்பறிக்கும் நன்றி மறந்த கார் டிரைவர்பாலியல்ஆசையை தூண்டி சிறுவனை கெடுக்கும் வேலைக்காரப் பெண் ஏதும் அறியா கெடுக்கப்பட்ட சிறுவன் வேலைக்கார பெண்ணை மானசீகமாக காதலிக்கும் விபரீதம் teenage வயதில் இளைஞர்கள் செய்யும் குறும்புகள்.
(கண்டிப்பாக வயது வந்தோருக்கு மட்டும்.

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி
அருகாமை
10-30, 12-30, 2-30. 4-45
"Attack Force"
(தாக்குதல் படை)
கொரில்லா பயிற்சி பெற்ற 4 இளைஞர்கள் அவர்களுடன் சேரும் குறிபார்த்து கத்தி எறிவதிலும், கராட்டியிலும் சிறந்த நண்பன் ஒருவன் இவர்கள் புரியும் தாக்குதல் கன நேரத்தில் திட்டமிட்டு செயல்படும் இளைஞர்கள் இவர்களின் குறிக்கு தப்பாது வீழ்ந்துபடும் யப்பானிய படைகள் அப்பப்பா சொல்லவே முடியாது நிமிடத்துக்கு நிமிடம் பார்ப்பவர்களை திகில் கொள்ளவைக்கும் சண்டைப்படம்

## 'உண்ணாவிரதம்'

(யாழ்ப்பாணம்)

சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவளிக்கும் முகமாக சண்டிலிப்பாய் இரட்டையர்புலம் வைரவர் கோவில் பரிபாலன சபையினர் நாளைக் காலை 8 மணி தொடக்கம் மாலை வரை உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொள்ளும் பொருட்டு பொது மக்களின் ஆதரவை வேண்டியுள்ளனர்.

## மினிபஸ்ஸை திருப்பித்தருக!

(பூநகரி)

கராஜ் ஒன்றில் திருத்த வேலைகள் முடிந்து பூநகரிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட பூநகரி ப. நோ. கூ. சங்கத்துக்குரிய பிரயாணிகள் மினிபஸ் இன்னமும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை.

மேற்படி சங்கம் குறித்த ஒரு பஸ்ஸை மாத்திரமே வைத்து பூநகரி பகுதி மக்களுக்கு சேவையாற்றி வந்தது என்றும் அது இளைஞர்களால் எடுத்துச் செல்லப்பட்டதை யடுத்து இப்பகுதி பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் கடத்திச் சென்ற மினிபஸ்ஸை (இல. 29 ஸ்ரீ 7780) திருப்பித்தரும் படியும் பூநகரி பிரஜைகள் குழுத்தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## 1983 இனக்கலவர நஷ்டஈடு 90 கோடி ரூபா

[கொழும்பு]

1983ம் ஆண்டு ஆடிக்கலவரத்தின்போது அழிந்த பொருட்களின் இழப்பீட்டுத் தொகையாக 90 கோடி 40 லட்சம் ரூபாவை தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழங்கியுள்ளதாக அதன் தலைவர் எஸ். நாணயக்கார கூறியுள்ளார்.

கட்டட அழிவுகளுக்காக 8 கோடி 50 லட்சம் ரூபாவும், வாகன எரிப்புகளுக்காக 50 கோடி ரூபாவும் நஷ்ட ஈடாக வழங்கப்பட்டுள்ளதாகவும் 2047 நஷ்ட ஈட்டுக் கோரிக்கைகளில் பெரும் பான்மையானவற்றைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நிறைவேற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
RAMBO
(ஒரிஜினல் பிரதி)

ராஜா மினி
தினசரி 10-30, 2-30, 6-30
சத்தியராஜ்-சில்க்சுமிதா
மின்னல் வீரர்கள்
(ஈஸ்மன் கலர்)
பயங்கரச் சண்டைகள்
நிறைந்தது.

யாழ். நவீன சந்தையில்

# தொழிற்சங்கக் கூட்டுக்குழுவினர் இன்று உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடை சிறைச்சாலை உண்ணாவிரதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். நவீன மார்க்கட்டில் வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுவினர் உண்ணாவிரதம் இருப்பார்கள்.

13 தொழிற்சங்கங்கள் பங்கு பற்றும் இந்த உண்ணாவிரதத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த உண்ணாவிரதம் மாலை 5 மணிக்கு முடிவடையும் எனக் கூறப்படுகிறது.

இன்று நடைபெறும் உண்ணாவிரதத்தில் சகல பாடசாலை ஊழியர்களையும் பங்கு பற்றுமாறு அரசாங்க பொது சேவை தொழிலாளர் சங்க கல்விக் கிளைத் தலைவர் திரு. நவரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கொள்ளை

(வவனியா)

மன்னார் கச்சேரி உடைக்கப்பட்டு பல முக்கிய அலுவலகப் பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

கடந்த 25 ம் திகதி இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இரவு காவலாளி பயமுறுத்தப்பட்டு கச்சேரி அலுவலகம் உடைக்கப்பட்டு மூன்று தட்டச்சு இயந்திரம், எட்டுதொலைபேசிகள், ஜெனரேட்டர், வாட்டர் பம்பு, றோணியோமெசின், வெள்ளை காகித தாள்கள் ஆகியன கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை தமிழர் பிரச்னை:

## அனைத்துக்கட்சி மாகாநாடு எம். ஜி. ஆர். நடத்துகிறார்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக ஆலோசனை நடத்துவதற்காக தமிழ் நாட்டிலுள்ள அனைத்து கட்சிகளின் கூட்டமொன்றை தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் கூட்டவுள்ளார்.

இந்த அனைத்துக்கட்சி கூட்டம் வரும் 13ம் திகதி சென்னையிலுள்ள தமிழ்நாடு தலைமைச்செயலகத்தில் முதலமைச்சர் திரு எம் ஜி ஆர் தலைமையில் நடைபெறவுள்ளது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அனைத்துகட்சி பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும்.

## இன்றுநடக்கும் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

"தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களைச் சிறைச்சாலைகளில் சாகடிக்காதே!" எனக்கோரி உண்ணாவிரதப் போராட்டமும் ஊர்வலமும் இன்று ஞாயிற்றுக்கிழமை அரியாலை மக்களால் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்வலம் அரியாலைமேற்கு ஸ்ரீ சரஸ்வதி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி, ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் முடிவுறும். புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் உண்ணாவிரதம் மாலை 5 மணிவரை நடைபெறும் எனத்தெரிகிறது.

கடைசி நேர
விளம்பரம்

காணவில்லை

பொது ஸ்தாபனம் ஒன்றிற்கு சொந்தமான "டெக்" 6-9-85 ல் முல்லைத்தீவு டிப்போ பஸ்ஸில் சாவகச்சேரிக்கும்-யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவற விட்டுவிட்டோம். தகவல் தெரிந்தோர் அல்லது கண்டெடுத்தோர் தகவல் தரவும்: கே சண்முகராஜா, 32, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம். 619

## முருகனைப் போற்றுவோம்

முளரியில் முளைத்த முருகா போற்றி
கயிலையில் உதித்த கந்தா போற்றி
காசினிகாக்கும் கடம்பா போற்றி
கார்த்திகைப் பெண்கள் மைந்தா போற்றி
நல்லையில் வாழும் நாயகா போற்றி
நலிந்தோர்க் குதவும் குகனே போற்றி
சூரனையழித்த சுந்தரா போற்றி
ஈசனைவென்ற இனியனே போற்றி
வேல் கொண்டாடும் வேலா போற்றி
வினை தீர்த்தருளும் குமரா போற்றி
மலைமீதமர்ந்த மணியே போற்றி
மயில் வாகனமாம் மருகா போற்றி
வள்ளிநாயகா வடிவேல் போற்றி
வறுமை தீர்க்கும் வள்ளலே போற்றி
சங்கரன் மகனே சண்முகா போற்றி
ஐங்கரன் தம்பி அறுமுகா போற்றி போற்றி

— 'சாந்தி'

இன்று நல்லை முருகன் உற்சவம் 19-ம் நாள்

J. M. J.

திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் குரோதன வருடம் ஆவணி மாதம் 26ந் திகதி (11-09-85) புதன்கிழமை காலை 6-28—8-04 மணி வரையுமுள்ள கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

அன்ரன் லக்ஷா ஜுவல்லர்ஸ்
Anton Laxsha Jewellers

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் தாங்களும் சமுகந்தந்து ஸ்தாபனத்தை வாழ்த்தி அருளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறேன்;

185/2, கஸ்தூரியார் வீதி,
முதலாம் மாடி,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்
அ. அன்ரன் யேசுதாசன்

615

## மரண அறிவித்தல்

### நா. கனகசபாபதி



பன்னாலை தெல்லிப்பழையைச்சேர்ந்தவரும், முன்னாள் மாத்தளை அரசினர் வைத்தியசாலை Pharmacist நாகநாதர் கனகசபாபதி (Pharmacist, மாலைதீவு) காலமானார். இவர் காலஞ்சென்ற நாகநாதர்-செல்லமுத்துவின் அன்பு மகனும், அருணாதேவியின் (Pharmacist, மாலைதீவு) அன்புக் கணவரும், திரு, திருமதி C.A சண்முகநாதன் (அங்கப்பாறிய லிங்கர் சுகாதாரசேவை திணைக்களம்)னின் அன்பு மருமகனும், சிவசாந்தி, செல்வஸ்கந்தனின் அன்புத் தந்தையும், திருமதி ஈஸ்வரி சிவஞானம், காலஞ்சென்ற செல்வநாயகி, திருமதி. புனிதவதி சண்முகலிங்கம், திருமதி அன்னபூரணம் செல்வரத்தினம், செல்வி மகேஸ்வரி (மாவட்ட நீதிமன்றம் மன்னார்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவஞானம், சண்முகலிங்கம் (சட்ட ஆலோசகர், மக்கள் வங்கி, கண்டி), திருமதி தர்மபூபதி சுகதாசன், (இரசாயன கூட்டுத்தாபனம், பரந்தன்) சிறிஸ்கந்தராசா (கே. ஜி குறூப்), விஜிபராணி, சிறிபவானந்தராசா, சிறிபாஸ்கரராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 8-ம் திகதி ஞாயிறு (இன்று) காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார் உறவினர் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

(617) அருணோதயம், அம்பனை, தெல்லிப்பழை.

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

கள்ள மரங்களுடன்

# கிளிநொச்சியில் 15 டிராக்டர்கள் கடத்தல்!

(கிளிநொச்சி)

காடுகளில் கள்ள மரங்கள் ஏற்றி வந்த 15 டிராக்டர்கள் மரங்களுடன் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

இது வரை டிராக்டர்கள் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. கிளிநொச்சி இயக்கச்சிப் பகுதியில் இந்த டிராக்டர்கள் கடத்தப்பட்டதாம்.

காணாமல் போனதாகக் கூறப்படும் 15 ட்ராக்டர்களுக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனவும் ட்ராக்டர்கள் காணாமல் போன சம்பவங்களுக்கு தாம் பொறுப்பில்லை எனவும் கிளிநொச்சியில் ஈரோஸ் இயக்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர். (க)

## வவனியா....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கண்டி வீதியில் உள்ள அநேக காணிகள் இதற்கென சுவீகரிக்கப்படவுள்ளன. சுவீகரிப்பிற்கான உத்தரவு இன்னும் சில தினங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடைக்கலாம் என கருதப்படுகின்றது!

இச் சுவீகரிப்பு எல்லைக்குள் முக்கிய ஐந்து பெரிய அரிசி ஆலைகள் அடங்குகின்றன. அத்துடன் முன்னாள் வவனியா பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவருடைய காணிகளும் இதற்குள் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நூற்றுக்கணக்கான தமிழ் குடும்பங்கள் இச் சுவீகரிப்பினால் தமது வீடு வாசல்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## கொள்ளை போன...

வித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: கீழ்க் காணும் பொருட்களை மீட்டுள்ளோம். ஒரு றெஹியா ருஇன் வன், எம். வி. 880 நாஷனல் டெக், என். வி. 2000 நாஷனல் டெக் படப்பிடிப்புக்கு பாவிக்கும் ஒரு டெக் (வி வி சி) 200 சி. சி. மோட்டார் சைக்கிள் ஹொண்டா, ஒரு தட்டச்சுயந்திரம் (ஆங்கிலம்), ஒரு போட் கார் (கறுப்பு சிகப்பு)

இப்பொருட்களை பெறவிரும்பும் உரிமையாளர்கள், தகுந்த அத்தாட்சி காட்டி உங்கள் பகுதியில் இருக்கும் எமது அமைப்பாளரிடம் தொடர்பு கொள்ளவும்.

மேலும் எமது ஸ்தாபனத்தின் பெயரினைப் பாவித்து நடாத்தப்படும் கொள்ளைகளையும் கொலைகளையும் கண்டிப்பதுடன், இவை சம்பந்தப்பட்டவர்கள் எம்மால் இனம் காணும் பட்சத்தில், அவர்கள் மீது நாம் மிகக் கடுமையான நடவடிக்கையை எடுக்கநேரிடும் என்பதனையும் தெரிவித்துக்கொள்வதோடு, எமது ஸ்தாபனத்தில் பெயரினைப் பாவிக்கும் கொள்ளையர்கொலைகாரர்கள் பற்றி தகவல்களை எமக்குத் தந்து உதவுமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றோம். (மா)

## 7 ஹெலிகாப்டர்....

பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த ஏழு ஹெலிகாப்டர்கள் பலத்த இரைச்சலுடன், இவற்றிலிருந்து இடையிடையே துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டனவாம். (பெ)

## மரண அறிவித்தல்

### திருமதி இராமசாமி சின்னத்தங்கம்

திருமதி இராமசாமி சின்னத்தங்கம் காலமாகி விட்டார். அன்னார் சுழிபுரம் மத்தி காலஞ்சென்ற ஆறுமுகம் இராமசாமி மலாயன் பென்சனியரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பதிகளின் மகளும் Dr ஜெயராஜசிங்கம் (London), நாகேஸ்வரி, ஈஸ்வரநேசன் London) ஆகியோரின் அன்புத்தாயாரும், Dr இரகுநாதன் (வாட்ட) சிவயோகவதியார் London), பூமாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், கேசவராஜ், செல்வச்சந்திரன், ரூபராஜ், இவநிதா, சிவசுதா சிவகலா ஆகியோரின் அன்பு பாட்டியும் ஆவர் அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் சனிக்கிழமை 7-9-85 நடைபெற்று திருவடி நிலைய மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 604

## மரண அறிவித்தல்

### வேலாயுதம் சிவயோகரரசா (சிவா)

(தொழில்நுட்ப உதவியாளர் நீர்ப்பாசன இலாகா வவனியா)

உடுவிலைச் சேர்ந்தவரும் வவனியாவில் வசித்தவருமான வேலாயுதம் சிவயோகராசா கடந்த செவ்வாய்க்கிழமை மதவாச்சிக்கும் அநுராதபுரத்துக்குமிடையில் அகால மரணமானார். இவர் அமரர் வேலாயுதம் - சரஸ்வதி தம்பதிகளின் மூத்தமகனும், காலஞ்சென்ற சிவயோகமணி, ஜெனகன், விமலா, அசோகன், மாலதி, மைதிலி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுப்பிரமணியம், கணேசானந்தனின் மைத்துனருமாவார். அன்னாரது ஆத்ம ஈடேற்றத்துக்கான சமய கிரியைகள், இன்று 08-09-85 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லமான 'அருள்வாசா' உடுவில் தெற்கில் நடைபெறும். 620

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389 — 24126

## 3 நாள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று மாலை 4ம் கட்ட உண்ணாவிரதத்தை வெலிக்கடை சிறையில் உண்ணாவிரதமிருக்கும் ரமேஷின் தாயார் பழரசம் கொடுத்து முடித்து வைத்தார்.

அன்னையர் முன்னணித் தலைவி திருமதி கைலாசபதி உரை நிகழ்த்தினார்.

இதற்கு முன்னதாக மருதனார்மடம் சந்தியிலிருந்து ஆரம்பமான மாதர் மறுமலர்ச்சிப் பேரணியைச் சேர்ந்தவர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று யாழ். பல்கலைக் கழகத்தை அடைந்தது.

அன்னையர் முன்னணியின் மௌன ஊர்வலம் யாழ் நகரிலிருந்து ஆரம்பமாகி யாழ் பல்கலைகழகத்தை அடைந்தது.

இரு ஊர்வலத்தினரும் யாழ் பல்கலைக்கழகத்தை சென்றடைந்த பின்னர் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களுக்குச் சென்று மகஜர்கள் கையளித்தனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றுமாலை 5ம்கட்ட உண்ணாவிரதம் ஆரம்பமானது.

### அன்று

இன்று அத்தியடி பிள்ளையார் கோவில் முன்றலில் உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது. (மா)

## முல்லைத்தீவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அச் சுவரொட்டிகளில் எரிபொருள்களைக் கொள்ளையடிக்க வேண்டாம், 'அத்தியாவசிய சேவைகளைச் சீர்குலைக்க வேண்டாம்' "சொல்வது ஒன்று செய்வது ஒன்று?" 'மக்களை பட்டினிச் சாவுக்கு அனுப்பாதே" என்னும் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு, தண்ணீரூற்று, முள்ளியவளை, வற்றாப்பழை ஆகிய இடங்களில் இக் கண்டன சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தண்ணீரூற்று கிராம அபிவிருத்திச் சங்கமும் இந்த எரிபொருள் கொள்ளைக்கு தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கும் துண்டுப்பிரசுரம் ஒன்றினை வெளியிட்டுள்ளது. அதில்; 'அத்தியாவசிய சேவைகளைச் சீர்குலைக்கும் கொள்ளைகளால் மக்கள் பட்டினிச் சாவுக்கு உள்ளாக நேரிடும், "எரிபொருள் கொள்ளைகளால் விவசாய முயற்சிகள் 6 மாதங்களுக்குப் பின் தள்ளப்படுகிறது" இனிமேல் சொல்லைகள் வேண்டாம் என்று கேட்கப்பட்டுள்ளது. (க)

## 500 பெண்கள் மௌன ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடை சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யக்கோரி, நேற்றுக்காலை யாழ். பஸ் நிலையத்திலிருந்து அன்னையர் முன்னணி சுலோக அட்டைகளுடன் மௌன ஊர்வலமொன்றை நடாத்தி இறுதியில் உண்ணாவிரதத்தையும் மேற்கொண்டது.

சுமார் 500 பெண்கள் கலந்து கொண்ட இந்த ஊர்வலம் நேற்றுக்காலை பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு, பலாலி வீதி வழியாக யாழ். பல்கலை கழகத்திற்கு சென்றடைந்தனர். பின்னர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். (க)

## ஈழம் செய்திப்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'லங்காபுவத்' பொய் சொல்லுகிறது. வவனியாவில் சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து பேரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள்... அப்பாவிப் பொதுமக்கள், தீவிரவாதிகள் அல்ல.

திருகோணமலை - அரசாங்க வைத்தியசாலைச் சிற்றூழியர்கள் தமிழர்களை அழிக்க குழு அமைத்துள்ளனராம்.

வவனியா - காடையர்கள், இராணுவத்தினர் கின்னத்தம் பண்ணையில் 35 தமிழர் வீடுகள் தீக்கிரை, தம்பன்னகுளத்தில் சிங்களவரின் வீடுகள் தீக்கிரை.

மட்டக்களப்பு - முகாமிலிருந்து 51 இராணுவ வீரர்களைக் காணவில்லையாம்.

பிந்திய செய்தி:- மட்டக்களப்பில் இராணுவ ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டது?

யாழ்ப்பாணம் - மாதர் மறுமலர்ச்சிப் பேரணி, அன்னையர் முன்னணி, தலைமையில் ஆயிரக்கணக்கான பெண்கள் வெலிக்கடைப் போராளிகளுக்கு ஆதரவாக ஊர்வலம்.

வெலிக்கடைப் போராட்டம் 31-வது நாள். (மா)

## தேடுதல்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

திக் கரை சேர்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பாலினை கடற்கரைப் பகுதியிலேயே இச்சம்பவம் மாலை 6-30 மணியளவில் நிகழ்ந்தது.

மட்டக்களப்பிலுள்ள ஒரு சமூகத்தினர் குறிப்பிட்ட தகவலைக் கொடுத்து, வள்ளம் ஒன்றில் அதிரடிப் பிரிவினரை கொண்டுசென்றனராம், வேகமான கடல் அலைகளினால் அவ் வள்ளம் நீரில் கவிழ்ந்தது. வள்ளத்திலிருந்தவர்கள் பொருட்களுடன் நீரில் வீழ்ந்தனர். ஆயினும் ஒருவாறு கடலில் நீந்திக் கரை சேர்ந்தனராம்.

3 வாகனங்களில் பொலிசாரும், அதிரடிப்படையினரும் இத் தேடுதலில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (மா)

## இனவாதம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வேண்டியுள்ளது;

தமிழன் சிங்களவன் என்ற இனவாதப் போராட்டம் தொடருமேயானால் எமது மக்களுக்கும், பிரதேசத்துக்குமே அழிவு ஏற்படும்.

'இனவாதத்தை' மூலதனமாகக் கொண்ட ஏகாதிபத்திய வாதிகளுக்கு இப் போராட்டம் மேலும் வாய்ப்பாக அமையும்.

### திம்பு பேச்சு

"பேச்சுவார்த்தைகள் மூலம் எமது உரிமைகள் வழங்கப்படமாட்டாது என்பதை நாம் அறிவோம், ஆயினும் உலக நாடுகள் மத்தியிலும், இந்திய அரசிடமும் எமது கோரிக்கைகளை நியாயப் படுத்தவும், இலங்கை அரசின் முகத்திரையைக் கிழித்தெறியவுமே திம்பு பேச்சில் நாம் கலந்து கொண்டோம்."

"முன்னாள் தமிழர்விடுதலைக் கூட்டணி எம் பிக்களான திரு. வி தருமலிங்கம், திரு மு. ஆலாலசுந்தரம் ஆகியோர் கொலை செய்யப்பட்டதை சாதாரண சம்பவங்களாகக் கருதிவிடமுடியாது.

இக் கொலைகளை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் கண்டிக்கிறது! தமிழ் மக்களும் இது போன்ற தனிநபர் கொலைகளைக் கண்டிப்பதில் தயக்கம் காட்டாது

### த. வி. கூட்டணி நிலை

இத்தகைய தனிநபர் கொலைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முன்பு கண்டிக்காமல் மௌனம் சாதித்தமையாலேயே இன்று இக் கொலைகள் அவர்களை நோக்கித் திரும்பியுள்ளன.

உணர்ச்சி வசப்பட்ட சிறு சிறு தாக்குதல்களால் எமது போராட்டத்துக்கு வெற்றி கிடைக்காது.

கொலை செய்யப்பட்ட திரு. தர்மலிங்கம் சோவியத் நட்புறவுச்சங்கத்தின் அங்கத்தவராவார். இவர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஒரு முற்போக்குவாதியாவார் கலவான எம். பி திரு சரத்முத்தெட்டுவேகமவின் வெற்றிக்கும் இவர் ஒத்துழைப்பு வழங்கினார்.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் மட்டுமல்லாது உர்க்கவிடுதலை போராட்டத்துக்கும் இவர் குரல் கொடுத்தார். இவரது மறைவு பேரிழப்பாகும்"

எனவே தமிழ் மக்கள் இத்தகைய தனிமனித படுகொலைகளை ஒன்று திரண்டு கண்டிப்பதுடன் சர்வதேச முற்போக்குச்சக்திகளின் ஆதரவுடன் சிங்கள முற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும்" என்றார். (கி)

எமது
இன்றைய புதிய வெளியீடுகள்

புஷ்பா தங்கத்துரையின்
அந்த ஜூன் 16-ம் நாள்

விஜயகாந், அம்பிகா நடித்த
புதிய சகாப்தம் (Pyramid)

வீடியோ பிரசாத்
49, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.